பதிவு எண் 2041 KUDI ARASU. தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா / வெளி நாடு 1½ அணா

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, ... | ரூ 1-12 |
| வெளி நாட்டிற்கு ,, ... | ரூ 4—0 |

வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வே. ராமசாமி,

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 4 | ஈரோடு, விபவ வருஷம் ஆனி மீ 18உ. (1—7—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 10

:: ரஸ்டன் ஹெலிகல் ::
சென்ட்ரிப்யூகல் பம்புகள்.

விவசாயத்துக்கு இன்றியமையாதது-
நிமிஷம் 1 க்கு 100 முதல் 4800 காலன் வரை
80 அடி உயரத்திற்கு தண்ணீர்
எடுக்கக்கூடியது.
கோயமுத்தூரில் தயாரில் இருக்கின்றன.

- ரஸ்டன்-ஹார்ன்ஸ்பி -
க்ரூட் ஆயில் இன்ஜின்களும் தயாரில்
இருக்கின்றன.

MASSEY & Co LTD
ENGINEERS
மாசி அண்ட் கம்பெனி, Ltd,
திருச்சி ரோடு, ரெட்பீல்ட்ஸ் போஸ்ட்டு,
கோயமுத்தூர்.

## போட்டோ ஆல்பம்.




நேயர்களே! இந்த ஆல்பத்தில் பன்னிரண்டு விதமான ப்ரெஞ்சு லேடிகளின் படுக்கையறைப் போட்டோக்கள் பார்க்க வெகு சுந்தரமாக வைக்கப்பெற்றிருக்கின்றன. பாரிஸ் மாதரின் லீலா விநோதமும் ஒப்புயர் வற்ற ரூபலாவண்யமும் பலதினுசு சாயல்களில் கண்டு ஆனந்திக்கலாம். ஒரு ஆல்பம் தருவித்தவர் உடனே திரும்ப ஆறு ஆல்பங்கள் அனுப்புங்கள் எனக் கடிதம் எழுதுகிறார்கள் நீங்கள் உடனே முந்துங்கள். விலை ரூ 2-12-0

தி. கிருஷ்ணா ஏஜன்சி, தபால் பெட்டி 119 மதராஸ்.

## டிடக்டாவ்ஸ்
அல்லது
## துப்பு இரகசியம் அறியும் கருவி.



இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும் அவள் செய்யும் காரியங்களையும் அவள் அறிந்து கொள்ளாமலேயே இதன்மூலமாய்ப் பார்க்கலாம். உம்முடைய பின்னும் உமக்குத் தெரியாமல் நடக்கிறதை ஏககாலத்தில் இரண்டையும் இதன் மூலமாகக் கண்டுகொள்ளலாம். உமக்குத் தெரியாமல் உம்மைப்பின்தொடர்ந்து வருபவரை நீர் திரும்பிப்பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக்கொள்ளலாம். இன்னும் பலவித இரகசியங்களை இதன் மூலமாய் ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டு பிடிக்கலாம்.

இத்துடன் பல கலர்களால்தயாரித்த படுக்கை அறையின் 4 அழகிய போட்டோ படங்களுடன் கூடி கருவி விலை ரூபா 2 தான்.

மலாய் நாடுகளுக்கு முன்பணம் வந்தாலன்றி வேண்டிப்பாய் வி. பி. யில் அனுப்பமுடியாது.

பாரிஸ் எம்போரியம் ஜி. டி. மதராஸ்.

## நூதன ஜெர்மன் எலக்டிரிக் விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாக்கூடி விடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும், குறைந்த விலை 4—8—0 தபால் செலவு 0—8—0.



தி. பான்ஸி வாட்ச் அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதராஸ்.

இனாம்! இனாம்!! இனாம்!!!

எங்கள் லேஹியமானது ஸ்ரீ கொக்கோக மஹாமுனிவரால் அருளிச் செய்யப் பட்டதல்லவென்று நிரூபிப்பவர்களுக்கு ரு. 1000 இனாம்.

ஸ்ரீ கொக்கோக மஹா முனிவர் அருளிச்செய்த அசல்

# சிந்தாமணி லேஹியம்.

(அமிர்தானந்த செந்தூரம்.)

இந்த லேகியத்தில் 196 விதக் கடைச் சரக்குகளும், வித்துகளும், யூனானி மிஸ்ரிகளும், பொன் அம்பர், பாதம் பருப்பு, பிஸ்தா, அக்ரோட், சல்கூஜா பருப்புகளும், அவைகளுடன் மலை மூலிகைகளைக் கொண்டுவந்து இயந்திரத்தின் வாயிலாய்க் கொடுத்து அதன் மூலமாய் வரும் சஞ்சீவியின் சத்தை வரானமாகச் சேர்த்து பசு நெய், பசும் பால், மலைத் தேன் முதலியனவும் உதவாமல், கை பாகம், செய்பாகம் தவறாமல் செய்துள்ளோம். ஆகார விஷயத்தில் யாதும் நிர்ப்பந்தமில்லை. எல்லா காலத்திலும் எல்லா ஊரிலும் எந்த சிரோஷ்ண நிலைமையிலும் மேற்படி லேகிய செந்தூரத்தை சாப்பிடலாம். சாப்பிடுவதற்கும் வாய்க்கு அல்வாவைக் காட்டிலும் அதிக ருசியுள்ளதாயிருக்கும் என்பதையும் அறிவித்துக் கொள்ளுகிறோம். இதற்கு பத்தியம் இல்லை.

## இந்த லேகிய செந்தூரத்தை சாப்பிடுவதனால் உண்டாகும் குணங்கள்.

1. நித்திரையிலும் பெண்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதும் நினைத்தபோதும் உண்டாகும் துரிதஸ்கலிதம் என்னும் கொடிய வியாதியை தலையெடுக்கவொட்டாமல் நாசஞ் செய்துவிடும்.
2. தளர்ந்து துவண்டு மெலிவுபட்ட இராஜ கருவிகளாகிய நரம்புகளை முறுக்கேற்றி கெட்டிப்படுத்தி கைகால் இடுப்பு முதலியவைகளுக்கு அதிக பலத்தைக் கொடுத்து இல்லறத்தில் அபரிமிதமான பிரியத்தைத் தரும்.
3. கிழத் தன்மையைப் போக்கி இளமையைத் திருப்பித்தரும்.
4. சரீரமானது பத்தரைமாற்றுப் பசும் பொன்னைப்போல் பளபளப்பைத் தரும்.
5. ஞாபக சக்தியை அதிகப்படுத்தி இன்பரசத்தை ஊட்டும்.
6. இன்னும் மேக சம்பந்தமான குன்மங்கள், சூலை, அண்டவாதம், குடல்வாதம், ஆண், பெண் குறிகளிலுண்டாகும் மேகங்கள், பாரிசவாய்வு, ஊதுவாதம், அஜீர்ணம் முதலியவையும் காற்றாய்ப் பறந்து உடம்புக்கு சுகத்தைக் கொடுக்கும்.

நண்பர்களே! இந்த லேகியமானது 50 வருட காலமாய் இந்தியா, பர்மா, சிலோன் ஐக்கிய மலாய் நாடுகள், ஜாவா, மோரீஸ், நேட்டால் முதலிய பல தேசங்களில் நிகரற்ற தென பிரசித்தி பெற்றது. நூற்றுக் கணக்கான சுதேச வைத்தியர்கள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், லாயர்கள், தேசாபிமானிகள், ஸ்கூல் உபாத்தியாயர்கள், வர்த்தகர்கள், தலைமை கங்காணிமார்கள் முதலிய கனதனவான்கள் எமது லேகியத்தை புசித்து ஆயிரக்கணக்கான நற் சாட்சிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு மண்டலம் 48 நாள் சாப்பிடக் கூடிய லேகிய செந்தூரம் டப்பி ஒன்றுக்கு ரூபாய் 5. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் முன்பணம் அனுப்பும்போது தபாற் செலவையும் சேர்த்து அனுப்ப வேண்டுமென்று நிரம்பவும் தாழ்மையாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

எமது விலாசம்: ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜ கட்டடம், ஜி. டி. மதறாஸ்.

மூன்றாவது வருஷம்! மூன்றாவது வருஷம்!!

தமிழ் மாத சஞ்சிகைகளில் முதன்மை பெற்றதும், பல்லாயிரக்கணக்கான சந்தாதார்களுடையதும், தமிழ் தலைவர்கள் எல்லோரும் போற்றி வருவதுமான

# ஆனந்த விகடன்

இதற்கு மூன்றாம் வருஷம் பிறந்து விட்டது. இதில் மாதா மாதம் பல பெரிய மேதாவிகளால் எழுதப்படும் அரிய கட்டுரைகள் வெளிவரும். தேச நன்மைக்காகவும், தமிழரின் சுயமதிப்புக்காகவும் அரும்பாடுபட்டு எவருக்கும் அஞ்சாமல் தனது அபிப்பிராயத்தை சுயமே வெளியிடும் தமிழ் மாதப் பத்திரிகை இது ஒன்றேயாகும். இன்னும் விநோதமான விஷயங்களும், விகடப்பேச்சுகளும், வாழ்க்கையின் மர்மங்களும், வியாபாரக்குறிப்புகளும், வைத்திய விவசாயாதிகளும் அனுபவசாலிகளால் வரையப்பட்டு இப்பத்திரிகையில் இடங்கொள்கின்றன. இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்களுக்கு வருட சந்தா தபால் கூலியுள்பட ரூ.1-0-0 வெளி நாடுகளுக்கு முன்பணம் ரூ 1-4-0. மாதிரி காப்பி இனாம்!

விலாசம்:— 'ஆனந்த விகடன்' ஆபீஸ்,
244, தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:— "விகடன்" சென்னை. டெலிபோன் 3311.

சிரிப்பு! சிரித்து சிரித்து வயிறு சிரிப்பு!
புண்ணாய் விட்டதென்று ஒருவர் எழுதுகிறார்.

# முத்துமாமா.


நேயர்களே! இந்தக் கதையைப் படித்து விட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள். தூங்கும்போதும்கூட சிரிப்பீர்கள். வேண்டுவோர் 4½ அணா ஸ்டாம்பு அனுப்பவும். எந்த தேசத்து ஸ்டாம்பாயிருந்தாலும் அனுப்பலாம்.

வாலன் புஸ்தகசாலை,
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்.

## முந்துங்கள்!

விலை ரு. 3-8-0 தான் ரு. 3-8-0 தான்

110 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி



சாமான்களின் விவரம்.

18 காரட் ரோல்டு கோல்டு அழகிய கிப்புள்ள பவுண்டன் பேனா 1; 18 காரட் ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; டை சர்ட் பொத்தான்கள் செட் 12; டை கல்விழைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; நேர்த்தியான முகம் பார்க்கும் கண்ணாடி 1; அழகிய தந்த சீப்பு 1; மடிப்புள்ள கத்தி 1; நேர்த்தியான கத்தி 1; காமினேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பேன்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலரக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த கிப்புகள் 12; மணிபர்ஸ் 1; ஜெர்மன் இங்கி புட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசிய டிரான்ஸ்பர் படங்கள் 12; அழகிய பலரக சேப்டி பின்கள் 25 ஆக 110 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி 1-க்கு 3—8—0. P. K. மூர்த்தி கம்பெனி

தபால் பெட்டி 119, மதராஸ்.

## 'சேலம் மாம்பழம்'

விற்பனைக்கு தயாராகிவிட்டது; விலை சரசம்.

தினசரி மார்க்கட் நிலவரத்திற்கு என்னுடைய சொந்த பார்வையின்மேல் பொறுக்கி எடுத்து ஜாக்கிரதையாய் பாக் செய்தனுப்பப்படும். அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.

செடிகள், விதைகள் கேட்லாக் இனாம்.

ச. கோ. இ. காதர்மீரு சாயபு,
ஹெட்நர்சரி அண்டு பழவியாபாரம், சேலம்.
தந்தி விலாசம்:— "ஸ்டோர்," சேலம்.

## மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஆம் ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார்
இஞ்சினியரிங்வொர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

# மாணக்கர்க்குப் புராண உபதேசம் பலன்கொடுப்பதில்லையே.

கைவல்ய சாமியார் எழுதுவது.

நமது பள்ளிச் சிறுவர்களுக் கென்று பாட புத்தகமாக பல பண்டிதர்களும் உபாத்தியாயர்களும் அனேக புஸ்தகங்கள் எழுதுகிறார்கள். ஒவ்வொரு புஸ்தகத்திலும் "பள்ளிப் பிள்ளைகளின் தன்மையை அறிந்து அவர்களுக்கு ஏற்றவாறு எழுதப்பட்ட புஸ்தகம் இது தான்" என்று அதனதன் முக வுரையில் எழுதுகிறார்கள். அவற்றுள் சில ஆங்கில நூற்களின் மொழி பெயர்ப்பு, சில நூலாசிரியர்களின் கற்பனா சக்தியினின்றும் வெளிவந்தவை இவைகளை நீக்கி நமது புராண இதிகாசங்களைப்பற்றி எழுதின புஸ்தகங்களை நமது சிறுவர்களுக்குப் போதிப்பதில் அவர்களுக்குண்டாகும் சந்தேகங்களை நீக்க உபாத்தியாயர்கள் புறப்படுகையில் சிறுவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லமுடியாமல் உபாத்தியாயர்கள் தோல்வியடைகிறார்கள்.

மாணக்கர்கள் மதவொழுக்கத்திலிருந்து தவறாமலிருக்க மதக்கல்வியைப் புகட்டவேண்டி இதிகாச புராணங்களிலுள்ள கதைகளைச் சுருக்கமாக வெழுதிப் பள்ளிப்பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்கிறார்கள். நமது புராணங்களில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் உண்மையாகவே நடந்தவைகளல்லவென்றும் அப்புராணங்கள் நீதிகளைப்போதிப்பதற்காகவே எழுதப்பட்ட கட்டுக்கதைகளென்றும் சொல்லவேண்டிய இடத்திலும் சாதாரண புத்திக்கும் அறிவிற்கும் ஒவ்வாத ஆபாசமான இடத்திலும் 'கதை கதை தான்' என்று சொல்லி தப்பித்துக் கொண்டு, அவர்கள் மௌடீகமும் மூடபக்தர்களும் அதை மறைத்து சமயத்தின் ஒரு கறையைக்கூடத்தொட மனசத்தமில்லாமல் தங்களை தாங்களே சமய வாதிகளென நினைந்து "உலகத்தோருக்கு நீதி நெறியைப் போதிக்கவேண்டுமென்ற கருணை நோக்கத்துடன் செய்யும் லீலைகளுக்கு எல்லையை ஏற்படுத்துவதற்கு புல்லறிவுடைய மனிதர் ஏற்றவரன்று" என்றும் "பெரியவராகிய முனிசிரேட்டர்கள் நடக்காத விஷயங்களை நடந்தவைகளெனப் பொய்யாய் உரைத்தாரென்று நினைப்பதே மகாபாவமாகும்" என்றும் "ஆதலின் நமது பெரியோர் சொல்லை வேதவாக்காக நினைத்து அப்புராணங்களில் கூறப்பட்டுள்ள லீலைகளை நம்பவேண்டும்" என்றும் "அப்படி நம்பாதவன் நாஸ்திகன்" என்றும் மாணவர்களுக்கு உபதேசம் செய்தால் குழந்தைகளின் அறிவெப்படி விருத்தியாகும்? உயர்ந்தநோக்கங்களும ஆராய்ச்சிகளும் அவர்கள் மனதில் எப்படி உதிக்கும்? 'எல்லாம் கடவுள் லீலை' என்கிற சோம்பலுக்கு இரையாகி வாழ்க்கைக்கு வேண்டியவைகளுக்கு வாடி வதங்கி வஞ்சனைக்கு வசப்பட்டு வாயில் கடவுளை வாழ்த்திக்கொண்டிருக்கவே முடிகிறது.

இந்த காலத்து மூன்றாவது நான்காவது வகுப்புபிள்ளைகளுக்கு சமய ஆசாரிகளின் சரித்திரங்களை உபாத்தியாயர் போதிக்கையில் "அய்யா! சுந்தர சுவாமிகளின் சரித்திரத்தைப் படித்தோம். நீங்கள் சொல்லுவதையும் கேட்டோம். அவர் சத்தியம் செய்து ஒரு பெண்ணை விவாகம் செய்து கொண்டு, அதைவிட்டு மறுபெண்ணிடம் விவாகமாகவில்லை என்று அந்தப்பெண்ணிற்கும் பொய்ச்சத்தியம் செய்து கொடுத்து, அந்த சத்தியத்திற்கு சிவபெருமானே யுக்தியும் தந்திரமும் சொல்லி தான் இல்லாத இடத்தையும் காட்டி, பொய் சத்தியம் செய்வதற்கு உடந்தையாகயிருந்தார் என்பது பெரியவர்கட்கும் கடவுளுக்கும் ஒழுங்குக்கும் விரோதமல்லவா!" என்று மாணவர்கள் உபாத்தியாயர்களை கேட்கையில் எந்த வித சமாதானத்தால் அவர்கள் மனதை திருப்தி செய்ய முடியும்? மாணக்கர்களை உபாத்தியாயர்கள் கோபித்துக்கொள்ளலாம். 'அதிகப்பிரசங்கி' என்னலாம். இங்கிலீஷ் பள்ளிக்கூடத்தினால் வந்த வினை என்னலாம். இதனாலெல்லாம் மாணவர்களின் புத்திக்கு உபாத்தியாயர்கள் செய்த நன்மையென்ன?

அய்யா! "மாணிக்கவாசகர் மந்திரியாக விருந்தார். குதிரை வாங்க இராஜா கொடுத்தபணத்தை கோவில் கட்டினார். அக்குற்றத்திற்காக இராஜா தெண்டிக்க, அதைக்கண்டு சிவபெருமான் நரியைக் குதிரையாகச்செய்து ராஜாவுக்கு கணக்கொப்புவித்து விட்டார். நடுச்சாமத்தில் அந்தப் பரிகளெல்லாம் பழயபடியே நரிகளாகி ஊளையிட்டு பழய குதிரைகளையும் கடித்துப் பாழ்பண்ணிவிட்டு போய்விட்டன" என்று மாணிக்கவாசகர் கதையில் சொல்லப்பட்டிருக்கிறது. எச்சப்பணமாகவிருந்தாலும் கோவில் கட்டிவிட்டால் சிவபெருமானுக்குத் திருப்தியும் பக்திக்கு விசேடமாகவிருந்தாலும் மந்திரியின் கடமையும், ராஜநீதியும், இவைகட்கு சாட்சியாகவிருக்கும் சிவபெருமானின் செய்கையும் சரியா! இந்தவிதமாக குதிரைவாங்கும் பணத்தைக் கோவில் கட்டும் மந்திரியும் காட்டிலிருக்கும் நரியை பொய்யாக குதிரை செய்து லாயத்தில் கட்டி பழய குதிரைகளையும் கொன்று நாட்டை அழிக்கும் தெய்வமும் பக்திமான்களும் நமக்கு அனுகூலமே பொங்கல் சோற்றுக்கும், புளியோதரைக்கும், புது புது திருநாளுக்கும், புலவர்கள் பாட்டுக்கும் குறைவுராது. குதிரைவாங்கும் பணத்திற்குக் குதிரையும் சைனியம் சேர்க்கும் பணத்திற்குச் சைனியமும் சேகரம் செய்யும் மந்திரியும், அதை ஆமோதிக்கும் கடவுளும் உடைய நாட்டிற்கு நம் நாடு அடிமைப்பட்டுப் பொங்கல் சோறும், கோவில் கட்டடமும், தவிர மற்றெல்லா போக போக்கியங்களும் நம் நாட்டை விட்டுக் கப்பல் கப்பலாகப் போவதற்குச் சிவபெருமான் உடந்தையாக விருக்கிறாரே "அது என்" என்று மாணக்கன் உபாத்தியாயரைக் கேட்கும் கேள்விக்குச் சரியான பதில் சொல்லவேண்டுமல்லவா? அப்படிக்கில்லாமல் பொங்கச்சோறு போய்விடுமே என்பதை நினைத்துச் சில பண்டிதர்கள் "குடி அரசு" சமயத்தை அழிக்க வந்திருக்கிறதென்றும், எல்லாரும் கூடி அதை எதிர்ப்போம் என்றும் கூட்டம் சேர்க்க நினைப்பதும், கடவுள்பேரில் வைத்த அன்பாகவிருந்தாலும் மழைகாலம் வந்துவிட்டது; குளிர்ந்த காற்றடிக்கிறது; அது மார்பில் பட்டால் நிமோனியா (Pneumonia) வந்துவிடும். சிவபெருமானின் விபூதியைக் கூட டாக்டர்கள் மதிக்காமல் வெள்ளைக்கார கம்பளி குடுத்துணியே போடவேண்டு மென்கிறார்கள். பண்டிதர்களும், ஒருநாள் வைதீகம் கெட்டாலும் கெடட்டும், பூஜைகளை பின்னால் செய்துகொள்ளுவோம் என்று கடைக்குப் போய் கம்பளி வாங்கி தையல்காரனிடம் தடுமாறி வீடுவந்து குடுத்துணி அணிந்துகொண்டு விபூதியைத் தலையில் தெளித்துக்கொண்டாலும் சைவ சமய ஆசார ஒழுக்கம் தவறாமலிருப்பதில் யாருக்கென்ன பெருமை. குதிரை வாங்கும் பணத்தால் கட்டப்பட்ட கோவிலில் குடி புகுந்து நன்றி பாராட்டின நம் தெய்வம் அன்னியர் படை எடுப்பில்மறைந்துபோய்விட்டதே. அன்றியும் இனியும் எந்த பக்தர்களுக்கும் தென்படவில்லையே. அந்த தெய்வம் மறைந்துபோன இடத்தைக் கண்டு பிடித்து உங்களிடம் அவரைக் கொண்டுவந்து சேர்க்க வந்திருக்கும் "குடி அரசை" யாரும் தடுக்காதீர்கள். தேடியும் காணாத தேவன் என்று சொன்னாலும் அத்தேவனால் நாம் அடையவேண்டிய எல்லாவித நன்மைகளையும் உங்களுக்குக் கொண்டுவந்து கொடுக்கையில் அத்தேவனை சில விடங்களில் விட்டு விட்டால் உங்களுக்கு ஒரு நஷ்டமும் வராது. நீங்கள் வாயில் மட்டும் சில சமயம் அவரை விடுவதில்லை. நாம் எந்த எந்த விடத்தில் அவரை விட்டுவிட்டோமோ எதற்காக நமது பேரிலும் நமது தேசத்தின்பேரிலும் வெறுப்படைந்திருக்கிறாரோ அதை உங்களுக்குக் "குடி அரசு" ஞாபகமூட்டவே வந்திருக்கிறது.

சூரியன அமைப்பில் ஓர் ஆச்சரியமான தோற்றமாகுமென்றும், அது அசைவதில்லை என்றும், பூமியே அதைச் சுற்றிச்சுற்றி பகல் இரவு முதலியவைகளை செய்கின்றதென்றும், பூமிக்கும் சூரியனுக்கும் அநேக மைல் தூரமென்றும் நமது பிள்ளைகளுக்கு இயற்கை சாஸ்திரத்தைக் கொண்டு பாடத்தின் மூலியமாக கற்பிக்கப்பட்டு அறிவு ஒருபக்கம் விர்த்தியாகவும், மறுபக்கம் சூரியனுக்கு சுக்கிரீவ ஆழ்வார் பிள்ளையாகப் பிறந்தாரென்றும் அனுமார் சூரியனுடன் ஆகாசத்தில் சஞ்சாரம் செய்து வேதம் கற்றுக்கொண்டாரென்றும், கொருடபகவானின் தமையன் அருணன் சூரியனுடைய சாரதி என்றும, குந்திக்குக் கன்னிப் பருவம் நீங்காத சமயம் சூரியனோடு கூடி கர்னனை கன்னத்தில் பெற்றாளென்றும் கதைகள் சிறுவர்களுக்குப் போதிக்கப்பட்டால் அவர்கள் அறிவிற்கு எப்படிப் பொருந்தும். தத்துவார்த்தங்களும் சமய வழி பாட்டின் ரகசியங்களும் பொங்கச் சோற்று வயிற்றுப் பிழைப்பிற்கு ஆகுமே ஒழிய சிறுவர்களின் அறிவு விருத்திக்கு என்ன நன்மையைச் செய்யும்? தன் காரியத்திற்கும், தன் குருட்டு நம்பிக்கைக்கும் தன் கோழை மனப்பற்றுக்கும் இசைந்தவாறெல்லாம் கதைகளை எழுதிவைத்துக்கொண்டு அவை உலகத்தின் உயர்விற்கும், ஞாயத்திற்கும் ஒத்து வரவில்லை என்று சொன்னால் அதைக் கோபிப்பதை விட்டுவிட்டு, தங்கள் நடவடிக்கைகளையும் உலக முற்போக்கையும் கவனித்தால் ஜனசமூகங்களின் அறிவு விர்த்தியாகுமென்பதே உயர்ந்தவர்களின் கூக்குரலாகவிருக்கிறது. உண்மை மனதிற்கு, ஒழுகவேண்டிய நன்னெறிகள் ஜனசமூகங்களை பற்றாமலும் இயற்கை அறிவின் உணர்ச்சி வராமலும் இருப்பதற்குக் காரணமாயிருக்கும் நம் மூட வழக்கங்கள் போகவேண்டுமென்று "குடி அரசு" சொல்லுகிறதே ஒழிய பெரியவர்களை குற்றம் சொல்லவன்று.

தாய் நோயுற்ற சமயமும், தாய்ப் பாலில்லாத சமயமும் குழந்தைகளுக்கு பசும் பாலை ஊட்டுகையில் சங்கு, கிண்டி முதலியவைகளில் குழந்தைகளின்பசிக்கும்வயிற்றுக்கும் அளவிற்கும் மீறி பாலைவார்த்து அதனால் குழந்தைகள் கஷ்டப்படுவதையும் அதிலும் சிலர் குழந்தைகள்வாய்க்குக் கீழே கையைவைத்துப் பாலை ஊற்றி குடிக்கவைக்கையில் குழந்தைகளின் மூக்கிலும் வாயிலும் பால் சென்று குழந்தைகள் திக்குமுக்காடுவதையும் நம் கடவுளும் அவரைச்சேர்ந்த இதிகாசப் புராணக் கதைகளும் அதை ஆராய்ச்சி செய்து கொண்டே இருக்கும் பண்டிதர்களும் பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள். தடுத்தாட்கொண்டதைக்கண்டோமில்லை. தாயின் ஸ்தனத்தைப்போன்று சுவைக்கும் தன்மையுடையதும் வயிற்றுக்கும் பசிக்கும் திருப்தியானவுடன் நிறுத்தக் கூடியதுமான ரப்பர் கருவி ஒன்றால் இயற்கை சாஸ்திரத்தின் உதவி தடுத்தாட்கொண்டதைக்கண்டோம். பாலில்லாத குழந்தைகளை தங்கள் சமய ஒழுக்க ஆசார அபிநய பொங்கற் சோற்று பக்தியே தடுத்தாட்கொள்ளுமென்று நினைத்து ரப்பர் குழாய் வாங்காமல் வைராக்கியத்துடனிருக்கும் பண்டித சமயவாதிகள் அவர்கள் மட்டோடிருந்து விட்டால் அவர்களைப் பற்றின கவலை யாருக்குமில்லை.

இதன் தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க...

# "நவசக்தி"யின் நடுக்கம்.

ஒரு போழ்து நம் தமிழ்நாடு அன்பிற்கும் அறத்திற்கும் நிலைக்களனாய் இருந்தது. சூது, வாது, அழுக்காறு, புனை, சுருட்டு, துவேஷம், உயர்வு-தாழ்வு, இன்னோரன்ன தீய தீமை பண்டைத் தமிழ்குடி மக்களிடத்தில் காண்டல் அரிது. அன்பு, சகோதரத்துவம், வாய்மை போன்ற செந்நெறியில் படிந்து அறக்கடவுளை வழுத்தி இயற்கை வனப்புகளிடையே இல்லற வாழ்க்கையை இனிது நடாத்தி வந்தனர். ஆனால் நாளாவட்டத்தில் உத்தரத்திலிருந்து வந்து ஆரியர் புகுந்த நாள் முதல் தமிழகத் தூய வாழ்விற்கு மாசு படர ஆரம்பிக்கலாயிற்று. ஆரியர் தம் வாழ்க்கையை ஸ்திரப்படுத்துவான் வேண்டி பல வழிகள் கோல வாரம்பித்தனர். அத்துறையில் அவர் இறங்குங்கால் நம்மிடையே பிணக்குகளைக் கிளத் மதத்தின் பெயரால் 'சாதி' எனும் நோவைப் பரப்பினர் என்பது ஆராய்ச்சிக்காரர்கள் கூற்று. ஆரியரின் வரவால் பெண்ணுரிமை களையப் பட்டது. மக்களுள் தீண்டாமை வகுக்கப்பட்டு, உயர்வு-தாழ்வு கற்பிக்கப்பட்டது. கோவில்களிலும் அறநிலயங்களிலும் கட்டுப்பாடுகள் கோலப்பட்டன. இவை நாட்டுக் கட்டுப்பாட்டைக் குலைத்து, நேர்மை யற்ற அலைகளைக் கிளப்பிவிட்டன. வாய்மை, உயர்களிடத்தன்பு, மக்களுள் சகோதர நேயம் குன்றின. ஆண்டவனின் அருளும் அருகிற்று. மக்கள் நுதலில் சோர்வும் அயர்வும் மிளிர்ந்தன. ஆனால் சுயநலக்காரரால் வகுக்கப்பட்ட சூது எவ்வளது நாள்தான் நாட்டில் நிலைக்கும்? சைதன்யர், புத்தர் போன்ற சீர்திருத்த அறிஞர் தோன்றினர். பல சீர்திருத்தங்களை நுழைத்தனர். சாதிக் கொடுமைகளை விளக்கிக் காட்டினர். சகோதரத்துவ முழக்கம் செய்தனர். இவர்கள் உயிருடன் நாட்டில் வதிந்துவரும் வரையில் மக்கள் அடிமை வாழ்வு நீங்கப்பெற்று சுதந்திர அன்னையின் ஆக்கத்தை அடைந்து வந்தனர். சுதந்தர தேவி முளைந்து எழும் வேளையில் இச் சமுதாயப் பெரியார் ஆவி நீத்தனர். அந்தோ! ஆரிய விலங்கினர் அன்றே குறுகிட்டு சுதந்தரக் கோட்டையைக் குலைக்க வாரம்பித்தனர். கோட்டையும் குலைந்து குலைந்து இடிந்து விழுந் தருவாயில் இருந்தது. இந்நாள் வரையிலும் எவரும் சிதைந்து போன கோட்டையைப் புதுக்க முயலவில்லை.

ஆனால் அண்மையில் ஈராண்டுகட்கு முன்பாக, மக்கள்பால் கருணை கொண்டு, திருவாளர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களும் அவர் தம் குழுவினரும் கோட்டையைப் புதுக்க வாரம்பித்தனர். அவர் முயற்சியில் பெரும் வெற்றியும் அடைந்து வருகின்றனர். பொது ஜனங்களும் தங்கள் ஆதரவைத் தாராளமாக நல்கிவருகின்றனர். இத்தூய இயக்கம் கோபுரம் முதல் குடிசையீறுகப் பானி கோடைச் சுடர் போல் பொன்றுத் தோற்றத்துடன் பொலிந்துவிளங்குகின்றது.

எவ்வியக்கத்துக்கும் மாறுபாடான இயக்கம் தோன்றுவது உலக இயல்பு. அத்தன்மைத்தே நம் புனித இயக்கத்திற்கும் வன்னெஞ்சர் குழுவிலிருந்து எதிர்ப்புகள் கிளம்பிக்கொண்டிருக்கின்றன. சில புரட்டர்கள் நம்புனித இயக்கத்துக்கு பல இடர்களை இட்டவண்ணமாகவே இருக்கின்றனர். சேர்வாராயன் சேரியிலிருந்து வெளிவரும் ஒரு காலி பத்திரிகையின் கூலிப்பிரசாரத்தை யாம் ஒரு போதும் பொருட் படுத்தோம். விஜாபுரம் சர்வமத' சங்கத்தாரின் முறையற்ற கூற்றுக்கு யாம் எமது கவனத்தைச் சிறிதும் செலுத்தப்போவதில்லை, பொது மக்களும் அவர்களின் இழி பிரசாரத்திற்கு செவிமடுக்கார் என்பது எமது துணிபு. இத்திரு கூட்டத்தாருள் திரு வி. கலியாணசுந்தர முதலியாரும் அவாது "நவசக்தியும்" சரண் புகுந்து விட்டனர் 'குடி அரசின்" கன்னியத்தையும் நாயக்கரின் செல்வாக்கையும் கண்டு "நவ சக்தி" நடுக்க முற்றனள் போலும்.! முதலியார் தடுமாற்ற முற்றனர் போலும். முதலியாரின் நிலைக்குப் பெரிதும் இரங்குகிறோம். காஞ்சீபுரம் மகா நாட்டில் திரு முதலியார் பார்ப்பனரல்லாதாருக்கு இழைத்தவடு இன்னும் ஆறவில்லை. இப்பாவங்கட்கு திரு. முதலியார் கடுவாய் தேடிக்கொண்டனரோ யாம் அறியோம். கோவை மகாநாட்டில் ஒரு பார்ப்பன அய்யங்காரைதாம் தலைவர் என்றழைத்த பாவத்திற்காக தம்து நாக்கை அறுத்துக் கொள்வதன் மூலம் கடுவாய் தேடிக்கொள்வதாக வாக்களித்த முதலியார் தமது நாககை அறுத்துக்கொள்ளாமல் இன்னும் வளர்த்துக்கொண்டு வருகிறார். இந்நிலையில் முதலியார் மறுபடியும் முக்காட்டை நீக்கி, மூலையைவிட்டு வெளிவந்து போர்முழக்க ஆரவாரம் செய்கின்றார். மிகச்சிக்கலான அரசியல் பிரசினைகள் நாட்டு மக்களின் உளத்தை ஆரற்றிக்கொண்டிருந்த ஞான்று அஞ்ஞாதவாசம் புரிந்துவந்த முதலியார் சுயமரியாதை முழக்கத்தைக்கேட்டு திடீரென ஞானம் பெற்று தன் ஓசையற்ற சங்கை ஊதப் புறப்படடுவிட்டார்.

ஸ்ரீ முதலியார் நம் தமிழ் நாட்டில் எப்பொழுதும் ஓர் சரித்திரக்காரராக விளங்கவில்லை; அல்லது ஓர் தியாகியாகவும் திகழவில்லை; ஆனால் கட்டுப் புராணக்கலை வல்லுனராகவே எப்பொழுவ முன் தோன்றுகிறார். இப்புராணத்திறனை திரு முதலியாரை நம் இயக்கத்தின்மீது மறப்போர் தொடங்கச் செய்தது போலும்!

போலிப் பௌராணிகர்களைக்கண்டவிடத்து காறி உமிழ்ந்து நகையாடும் நிலைக்கு நாடு உணர்ந்து விட்டது என்பதை திரு முதலியார் அறியார்போலும்!

திரு நாயக்கர் அவர்கள் "குருட்டு நம்பிக்கை ஒழியவேண்டும். சாதிப்பூசல், சமயப்பிணககு மறைதல் வேண்டும்; மக்களிடையே உயர்வு தாழ்வு கற்பிக்கும் வேதாகமபுராணங்கள் அழிதல்வேண்டும்" எனக்கூறின் 'அவர் நாத்திகத்தைப் புகுத்துகின்றார், தமிழ்ப்பெரியாரைத் தூற்றுகின்றார்' என்று பொருள்? ஏ! முதலியார் அவர்களே! என்னே நும்வியாக்யானத்திறனின் நுட்பம்! 1921 22 ல் ஒத்துழையாமை இயக்கம் வீரிட்டு எழுந்த காலத்து, வெள்ளையரசாங்கத்தைத் தொலைக்கவேண்டும் எனக்கிளர் ஒலமிட்டதைநீர், லெனின் ஆண்டுரூஸ் போன்ற பலதிற வெள்ளையரையும் கருவறுக்கப் பிரசாரம்செய்தீர் என யாம் கூற ஒருப்படின் நீர் ஏற்புவீரா? சற்றேசிந்தியும்.

> "கம்ப ராமாயணத்தையும் பெரிய புராணத்தையும் கவி அழகையும் வர்ணனையையும் குறிக்கொண்டு படிப்பவர்களிடம் எமக்கு வேலையில்லை. ஆனால் பாமர மக்களைக்கூட்டி வைத்து அதைப்படிப்பதுதான் பக்தியென்றும், தான் மோக்ஷம் என்றும், அதில் உள்ளவைகளை நம்பாதவன் நாஸ்திகன் மூடன், கடவுளையும், கடவுள் நெறியையும், கடவுள் நெறியை உணர்த்திய பெரியவர்களையும் தூஷிப்பவன் என்றும் சொல்லுகின்றார்களே அம்மாதிரியான மூடர்களின் பிரசாரம் ஒழிய வேண்டுவதுதான் நமது கவலை"

என திரு நாயக்கர் அவர்கள் சென்றவாரக்குடி அரசில் தீட்டியிருப்பதை, திரு முதலியார் பொதிய மலை போன்ற மலை உச்சிகளுக்குப் போந்து ஊன்றி நோக்குவாராக. அப்போது உண்மை செவ்விதில் புலனாகும்.

முதலியார் போன்ற அற்பக் கூட்டத்தினரின் பொருட்டு, கவிவர்ணனைகளை உன்னி போலிப்புராணங்களையும் போற்ற வேண்டுமாம்! பாமர மக்கள் கவி அழகை கவனிக்கின்றார்களா? இல்லை இல்லை அங்கே பல "கடவுள்"களால் நடாத்தப்படும் பெண்கள் லீலைத்திருவிளையாடல்களே அவர்கள் மனதிற் பதிகின்றன. அந்தோ! இத்தகைய புராணங்கட்கும் வக்காலத்து வாங்கப் பலர் புறப்பட்டு விடுகின்றனர்! இங்கு திரு முதலியாரின் வாதம் திரு காந்தியின் வாதத்தை ஒத்திருக்கிறது. வருணாசிரம தருமத்தால் நாடு பல கேடடைந்திருப்பினும் அத்தருமத்தில் உள்ளதாகச் சொல்லப்படும் சிறிய நன்மைக்காக அத்தருமத்தை உய்ப்பிக்கவேண்டுமெனக் காந்தி அடிகள் உரைத்தார் அஃதேபோல் புராணங்களினால் வரம்பிலா இடர் விளைந்திருப்பினும், சொற் சுவையின் பொருட்டு இப்பதர்களைப் போற்ற வேண்டுமென திரு முதலியார் பகர்கின்றார். நமது முதலியார் காந்தியின் திருவடி தீக்ஷைபெற்றவன்றோ? அவரிடமிருந்து வேறு என்ன எதிர் பார்க்க முடியும்? வருணாசிரம தர்மப் பிரசாரத்தின் இறுதியில் காந்தி அடிகள் தமிழ் மக்களால் உதறித் தள்ளப்பட்டனர். புராணப்புரட்டிற்குப் புத்துயிர் அளிக்கப் புகும் முதலியாரின் கதி என்னவாகுமோ? வர வர நிதானமாய்க் கண்டறிவோம். மறுமுறை புராண இழி கற்பனைகளை எடுத்தாள்வோம்.

தமிழ் மக்களே! ஒரு புடை அரசியல் பிழைப்புக் காரர் நம் இயக்கத்தை "சர்க்கார் பிரசாரம்" எனச்சாற்றுவர் இன்னொரு புடை மதப்புரட்டுப் பிழைப்புக் காரர் "நாத்திகப்பிரசாரம்" என நவில்வர், எவரெவர் கூற்று எவ்வெவ்வாறாகினும் ஆகுக. நமக்குக கவலை வேண்டாம். நம் சுயமரியாதை இயக்கம் நமக்கு உய்வளிக்க வந்ததெய்வீக இயக்கம் எனக் கொண்டு காரியத்தின் மீது கண்ணிறுத்துவோமாக.

எஸ். உத்தண்ட நாடார், விருதுநகர்.

# மதம் என்பது என்ன?

—)o(—

## அமெரிக்காவில் ஸ்ரீ இங்கர்சால் நிகழ்த்திய சொற்பொழிவு.

திரு. ரா. சௌரிராஜன் மொழிபெயர்த்தது.

நம்மிடமுள்ள சன்மார்க்க ஞானம் (அதாவது மனசாட்சி) என்று சொல்லப்படுகிற கொள்கையைக் கொண்டு கடவுள் ஒருவர் உண்டென நிலைநாட்ட ஆயிரக்கணக்கானவர்கள் முயன்றார்கள்.

அந்த வேத சாஸ்திரிகளாலும் தத்துவ சாஸ்திரிகளெனப்பட்ட பலராலும் இந்த சன்மார்க்க ஞானமானது, பணி செய்யும் அறிவானது, கட்டுப்பட்ட அறிவானது புறம்பேயிருந்து புகுத்தப்பட்டதென்றும் மனசாட்சியானது புறப்பொருளே என்றும் சாதிக்கப்பட்டது. ஈண்டு அது உண்டாக்கப்படவில்லையென்கிறதும் அது மண்ணோர்களால் ஆக்கப்பட்டதல்லவென்கிறதுமாகிற ஆதாரங்களினால் அவர்கள் இறைவன் ஒருவர் உளரென்றும் அவரிடமிருந்தே சகலமும் வந்ததென்றும் கற்பித்துக்கொண்டார்கள்.

மனிதன் அந்நியோந்நிய மானவன். குடும்பம், குலம், கோத்திரம் ஆகிய இவைகளுடனே நாம் வாழ்வு நடத்துகிறோம். எந்த குடும்பத்தவரோ கோத்திரக்காரரோ அந்தந்த குலம், குடும்பம், கோத்திரத்தின் பாக்கியத்தைப் பெருக்குகிறார்களோ அவர்களே சான்றோர்களாகக் கருதப்படுகிறார்கள்; அவர்கள் வணங்கப் படுகின்றார்கள்; புகழப்படுகிறார்கள்; மதிக்கப்படுகிறார்கள் அவர்கள் உத்தமமானவர்களாக (நீதியுள்ளவர்களாக) கருதப்படுகிறார்கள்.

எம்மக்கள் குடும்பத்துக்கோ, இனத்துக்கோ, குலத்துக்கோ இன்னலை விளைக்கிறார்களோ அவர்கள் பாதகர்களாகக் கருதப்படுகிறார்கள். அவர்கள் தூற்றப்படுகிறார்கள்; வெறுக்கப்படுகிறார்கள்; தண்டிக்கப்படுகிறார்கள்; அவர்கள் துன்மார்க்கர்களாகக் கருதப்படுகிறார்கள்.

நியாயத்தையும் ஒழுக்கத்தையும் வரையறுப்பது குடும்பம், இனம், அல்லது ஒரு தேசம். இதில இயல்பிற்கு மேம்பட்டதொன்றுமில்லை. மக்களில் மேதாவியானவர்கள் 'மனசாட்சி அன்பிலிருந்து பிறப்பதாகும்' என்று கூறியிருக்கின்றனர். கட்டுப்பட்ட பணிசெய்யும் அறிவானது இயற்கையிலே உண்டானதாகும். அநாகரீகர்களுக்குள் தற்சமயம் நிகழும காரியங்களை ஆராய்ந்தறியப்பட்டது. மனிதர் முன்னேறுங்கால் நுண்ணிய காரியங்களும் கவனிக்கப்படுகிறது. ஒழுக்கத்தின் நிர்ணய திட்டமானது வரவர அதிகமாகிறது. மனோபாவம் பண்படுத்தப்படுகிறது. மனிதன் பிறனுடைய ஸ்தானத்தில்தான் இருந்துகொள்கிறான். பணி செய்யும் அறிவானது அதிகபலம் பொருந்தியதாகவும் கட்டுப்பாடானதுமாகப் போய்விடுகிறது. மனிதன் தன்னைத்தானே நிர்ணயித்துக்கொள்கிறான்.

மனிதன நேசிக்கிறான். அன்பே உயர்ந்த சற்குணத்திற்கு ஆரம்பமாகும். அஸ்திவாரமாகும் அவன் நேசித்த பொருளைத் துன்புறுத்துகிறான். பிறகு துக்கம், சஞ்சலம், பச்சாதாபம், மனச்சாட்சி முதலியவை உண்டாகின்றன. இவைகளிலெல்லாம் இயல்பிற்கு மேம்பட்டதொன்றுமில்லை. மனிதன் தன்னையே ஏமாற்றிக்கொள்கிறான். இயற்கை ஒரு கண்ணாடி போன்றது; அதில் மனிதன் தன்னுடைய சொரூபத்தைப் பார்க்கிறான்; கண்ணாடிக்குள் காணும் உருவம் பிடிப்பட்டதுபோன்ற கொள்கையையுடைய இயல்பிற்கு மேம்பட்ட மதங்களையும் காண்கிறான்.

எல்லையற்ற பரம்பொருள் உண்டென வைத்துக்கொள்வோம். அப்பரம்பொருளான கடவுளுக்கு நாம் என்ன செய்யமுடியும்? முடிவற்றவராதலால் அவர் நிலைமையற்றவர்; நிலைமையற்றவராதலால் அவருக்கு நன்மையோ தீமையோ செய்யமுடியாது; அவர் ஒன்றை விரும்பமுடியாது; அவர் ஒன்றை வெறுக்கமுடியாது; அவருக்கு எல்லாம் இருக்கிறது.

மதம் பரீக்ஷிக்கப்பட்டது; ஆனால், எல்லா தேசங்களிலும் எல்லாக் காலங்களிலும் பிசகியது மதம். அது மனிதர்களை இரக்கமுள்ளவர்களாகச் செய்யவில்லை, விசாரணைச்சங்கத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். அடிமைத்தனத்தை மதம் என்ன செய்தது? மதம் எப்பொழுதும் கல்விக்கும் ஆராய்ச்சிக்கும் சிந்தனைக்கும் விரோதியாயிருந்துவருகிறது; ஒருபொழுதும் மதம் மனிதர்களை சுயேச்சையுள்ளவர்களாகச் செய்யவில்லை. மதம் மனிதர்களை சன்மார்க்கமுள்ளவர்களாக, இச்சை அடக்கமுள்ளவர்களாக தாளாண்மையுள்ளவர்களாக, யோக்கியமானவர்களாகச் செய்யவில்லை. மதஸ்தர்களெல்லாம் ஆநாகரீகர்களைவிட குணசீலர்களாகவிருக்கிறார்களா? அநாகரீகர்களுக்குள்ளும் அவர்களுடைய கெட்ட பழக்கங்களும் மத பக்தியினின்று வந்ததென்பதை நாம் காணவில்லையா? பிரார்த்தனையால் இயற்கையை நாம் ஏதேனும் செய்யமுடியுமா? ஆராதனையால் நாம் அலைகளைத் தடுக்கமுடியுமா? நைவேத்தியங்களினால் நாம் காற்றை மாற்ற முடியுமா? முழந்தாளிட்டு வணங்குவது நமக்குச் செல்வத்தைத் தருமா? வேண்டுகையால் நாம் வியாதியை நீக்கமுடியுமா? சடங்குகளால் நாம் நமது அறிவை விருத்தியாக்க முடியுமா? குணத்தையும் யோக்கியத்தையும் பிச்சைபோல வாங்கிக்கொள்ள முடியுமா? மானத உலகத்தில் தோன்றும் உண்மைகள் சட உலகத்தில் தோன்றும் உண்மைகளைப்போல இணங்காதவைகளாகவும், கட்டாயமானதாகவும் இருக்கவில்லையா? இயற்கைக்கு ஓர் அதிபதி உண்டென்றும் அவர் பிரார்த்தனைகளுக்குச் செவிசாய்க்கிறாரென்றும், அவர் துஷ்ட நிக்கிரகம் சிஷ்ட பரிபாலனம் செய்கிறாரென்றும், புகழை விரும்புகிறாரென்றும், தைரியவான்களையும் சுயேச்சையானவர்களையும் வெறுக்கிறாரென்றும் ஆகிய இக்கொள்கையாலேயே மதம் ஆக்கப்பட்டிருக்கிறது. எந்த மனிதனாவது விண்ணுலகத்தினின்று உதவி பெற்றிருக்கின்றானா?

நமது கோட்பாடுகளுக்கு ஏதேனும் உண்மைகளிருக்க வேண்டும். அவைகளுக்குத் தக்க சான்றுகளிருக்க வேண்டும். போலியானவைகளாலும், மனோ பாவத்தாலும் அநுமானத்தாலும் நம் கோட்பாடுகளை உண்டாக்கக்கூடாது. கட்டிடத்துக்கு அஸ்திவாரம் வேண்டும்; கட்ட ஆரம்பித்தால் அடியிலிருந்தே கட்ட ஆரம்பிக்க வேண்டும்.

என்னுடைய கோட்பாட்டுக்கு நான்கு படிகளிருக்கின்றன. முதல் படி அழிக்க முடியாததொருவஸ்துவாயிருக்கிறது. இரண்டாம்படி அழிக்க முடியாததொரு சக்தியாயிருக்கிறது. பொருளில்லாமல் சக்தியில்லை; சக்தியில்லாமல் பொருளில்லை. ஆதலின் மூன்றாவது படி சக்தியும் பொருளும் சேர்ந்தேயிருக்கிறது. நான்காவதுபடி, அழிக்க முடியாததொன்றை உண்டாக்கமுடியாது. இக்கொள்கைகளெல்லாம் கோட்பாடுகளாயிருந்தால் அது அவசியமாய் அந்த வஸ்துவையும் சக்தியையும் ஆதி முதல் அந்தம் வரையில் பின்பற்றுகிறது. அவைகளைக் குறைக்கவோ பெருக்கவோ முடியாது. அது ஒன்றையும் சிருஷ்டி செய்ய முடியாதென சொல்லுகிறது. அது கர்த்தா ஒருவர் இருக்க முடியாதென இயம்புகிறது. பொருளுக்கும் சக்திக்கும் புறம்பே ஓரறிவு இருக்கமுடியாதென்கிறது. சக்தியில்லாத அறிவு கிடையாது. சக்தியில்லாத பொருள் கிடையாது. ஆதலால் எவ்விதத்திலும் பொருளுக்குப் புறம்பாயுள்ளதொரு அறிவு கிடையாது. ஆதலால் இயற்கைக்கு மேம்பட்டதொன்று கிடையாது. இந்நான்கு படிகளும் ஒரு கோட்பாடானால் இயற்கைக்குத் தலைவன் கிடையாது. பொருளும் சக்தியுமே ஆதிமுதல் அந்தம் வரையில் இருந்தால் கடவுள் ஒருவர் இல்லை; வையகத்தைப் படைத்துக்காக்கும் கடவுளில்லை; துன்பப்பட்டவர்களுக்குத் துணைசெய்யும் கடவுளில்லை; யதார்த்தமானவர்களின் துன்பங்களைக்கண்டு மனமிரங்கும் கடவுள் ஒருவர் இல்லை; குழந்தைகளைப் பறிகொடுத்த தாய்களையும், அடிக்கப்பட்ட அடிமைகளையும் கவனிக்கும் கடவுள் ஒருவரில்லை; சவுக்கடிபட்டவர்களைக் காப்பாற்றும் கடவுள் ஒருவரில்லை; நெருப்பிலிருந்து பிராணத்தியாகிகளைக் காப்பாற்றிய கடவுள் ஒருவரில்லை; சுருங்கக்கூறின் அது, மனிதன் மேலுலகத்திலிருந்து ஒரு உதவியும் பெறவில்லை யென்று நிரூபிக்கிறது; நைவேதியங்களெல்லாம் வீணாயின. பிரார்த்தனைளெல்லாம் காற்றில் சென்று மறைந்தன. நான் அதிகம் தெரிந்தவனென்று சொல்லவில்லை மனதில் பட்டதை சொல்லுகிறேன்.

ஆதியந்தமில்லாததிலிருந்து பொருளும் சக்தியும் உண்டாயிற்றென்றால் அதுஇயன்றவெல்லாம் நடக்கின்றன. இயன்றவெல்லாம் நடக்கும் என்று சொல்லுகிறது.

நமது பிரபஞ்சத்தில் தற்செயலுமில்லை. வீண் செயலுமில்லை. ஒவ்வொரு காரியத்திற்கும் காரணமிருக்கிறது. முன்னே நடக்காதது பின்னும் நிகழாது. நிகழ்காலம் இறந்தகாலத்தின் பயனாகும். நிகழ்காலம்

எதிர்காலத்தின் காரணமாகும். ஆதிபந்தமில்லாத சங்கிலியில் உடைந்த கண்ணியில்லை. நட்சத்திரங்களின் நிலையும் கதியும், உலகத்தின் நிலையும், மாம்ச வாழ்வும், மரக்கறிவாழ்வும், உணர்ச்சியும், அறிவும், மனச்சான்றும் விருப்பும், வெறுப்பும், நல்வினையும், தீவினையும், எண்ணங்களும், மனோ பாவங்களும், பயமும் நம்பிக்கையும் இந்த உலகத்துக்கு அவசியமாகும். இந்தப் பிரபஞ்சத்திலுள்ள எண்ணிறந்த உண்மைகள் பேதமற்றவைகள்.

நித்தியத்திலிருந்து பொருளும் சக்தியும் உண்டாயிற்றென்றால், மனிதனுக்கு அறிவுடைய கர்த்தா ஒருவரில்லை என்றும் மனிதன் உத்தமமான சிருஷ்டியல்லவென்றும் நாம் சொல்லலாம்.

நமது முதல் தாய்தந்தையர் அன்னியர்களல்லவென்பது நமக்குத் தெரியும். அவர்கள் இவ்வையகத்தில் வாசம் செய்தார்களென்றும், அவர்கள் இவ்விடத்திலேயே பிறந்தார்களென்று, அவர்கள் கடவுளிடமிருந்து வரவில்லையென்று நமக்குத் தெரியும். உலகம் இயற்கையானதென்றும் ஆண் பெண் அனைவரும் இயற்கையாகவே பிறந்தார்களென்றும் இப்பொழுது நமக்குத் தெரியும். நமது முன்னோர்களையும் நமது வம்சங்களையும் நாம் அறிவோம். நமக்கு தழைத்த குடும்பம் இருக்கிறது.

ஆயிரக்கணக்கான வருஷங்களாக ஆண் பெண் அனைவரும் உலகத்தைச் சீர்திருத்த முயன்று வருகின்றனர். அவர்கள் கடவுளையும் பிசாசுகளையும் மோட்சத்தையும் நரகத்தையும் உண்டு பண்ணினார்கள். அவர்கள் வேத புத்தகங்களை எழுதினார்கள். 'அற்புதங்களை' செய்தார்கள்; அரசர்களை ஏற்படுத்தினார்கள்; மனிதர்களை அடித்தும், சிறையிலடைத்தும் உயிருடன் கொளுத்தியும் துன்புறுத்தினார்கள்; பயத்தையும் நயத்தையும் உபயோகப்படுத்தினார்கள்; கெஞ்சிக்கேட்டுப்பார்த்தார்கள், எண்ணிறந்த வழிகளால் மனிதர்களை யோக்கியர்களாகவும் நன்னடக்கமுள்ளவர்களாகவும் குணசீலர்களாகவும் செய்ய முயன்றார்கள்; வைத்தியசாலைகளையும் பள்ளிக்கூடங்களையும், கலாசாலைகளையும் கட்டினார்கள்; மனிதனை சீர்திருத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்தார்கள். இருந்தாலும் அவர்கள் தோல்வியடைந்தார்கள்.

சீர்திருத்தக்காரர்கள் ஏன் தவறினார்கள்? காரணத்தை நான் சொல்லுகிறேன்.

உலகத்தில் அறியாமையும் வறுமையும் கொடுமையும் நிறைந்திருக்கின்றன. தன்னையே காப்பாற்றிக் கொள்ள முடியாதவர்களுக்கு எண்ணிறந்த குழந்தைகள் இருக்கின்றன. அவர்கள் கடவுளையும் அதிர்ஷ்டத்தையும் தர்மத்தையுமே நம்பி இருக்கிறார்கள். பொறுப்பையாவது சந்தர்ப்பத்தையாவது யோசிப்பதற்குத் தகுந்த அறிவு அவர்களுக்குக் கிடையாது. அதனுடன் அவர்கள் குழந்தைகளை விரும்பவில்லை; ஏனெனின் குழந்தைகள் தங்களுக்கும் அவர்களுக்கும் சாபத்தைத் தேடிக் கொள்ளுகின்றன. குழந்தை ஒரு பெரிய பாரமாக இருப்பதால் குழந்தையைச் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொள்வதில்லை. இத்தகைய வெறுக்கப்பட்ட குழந்தைகளே சிறைச்சாலைகளுக்கும் சிகிச்சை சாலைகளுக்கும் தூக்கு மேடைகளுக்கும் திரள் திரளாய் செல்லுகின்றன. சிலர் தற்செயலாக காப்பாற்றப்படுகிறார்கள். ஆனால் பெரும்பாலோர் கைவிடப்படுகின்றனர். அவர்கள் துஷ்டர்களாகவும், கொடியவர்களாகவும் ஆகிறார்கள். கொள்ளையடித்தும் வஞ்சித்தும் அவர்கள் வாழ்ந்து அத்தகைய கொடூரச் செயல்களை பிள்ளைகளுக்கும் போதிக்கின்றனர்.

பாதகமாகிற வெள்ளத்தின் முன் சீர்திருத்தமாகிற சக்தி பயனற்றதாகி விட்டது. தற்காலத்து தருமங்கள் வெளிப்படையாக இல்லாவிட்டாலும் அந்தரங்கத்தில் கொடுமைகளைப் பெருக்குகிறது.

தவறுதல் இயற்கையின் அறிகுறியாகவிருக்கின்றது. ஏன்? இயற்கைக்கு அறிவு கிடையாது. திட்டமுங்கிடையாது, இயற்கை காரியமில்லாமல் உண்டுபண்ணியும் ஒருவித நோக்கமில்லாமல் காப்பாற்றியும் கொஞ்சமும் யோசியாமல் அழித்தும் வருகிறது. மனிதனுக்கு இருக்கும் சொற்ப அறிவையும் அவன் உபயோகப்படுத்த வேண்டும், மனித வர்க்கத்தைக் காப்பாற்றக் கூடியது அறிவு ஒன்றே. இப்பொழுது எழும் வினாவாவது:--

மூடர்களுக்கும், எளிமையானவர்களுக்கும், பாதகர்களுக்கும், குழந்தைகள் பிறக்காமல் செய்ய நம்மால் முடியுமா? அறியாமையும் பாபங்களும் நாகரீகத்தில் கலந்து கொள்ளாமல் செய்ய நம்மால் முடியுமா? இந்த உலகம் எவ்வளவு காலம் மூடபக்தியைக் கொண்டிருப்பது? ஒவ்வொரு காரியங்களையும் அனைவரும் ஆலோசிக்கும்படி உலகம் அவ்வளவு நாகரீகமடையுமா? மனிதர்களுக்குத் துன்பத்தையும் பந்தத்தையும் உண்டுபண்ணும் குழந்தைகளிருக்கின்றன. காரணமென்ன? அவர்களுக்கு அறிவைக்காட்டிலும் அதிக பக்தி இருக்கிறது; மனசாட்சியைவிட உயர்ந்த பக்தியிருக்கிறது; ஆராய்ச்சியைவிட அதிகமான பக்தியிருக்கிறது; இந்த மனிதர்களை வெறும் பேச்சுக்களால் சீர்திருத்த முடியாது. இவ்வித மனிதர்களை போதனையால் சீர்திருத்த முடியாது. பக்தி எப்பொழுதும் செவிடாயிருக்கிறது சீர்திருத்த முறைகள் எப்பொழுதும் பயனற்றதாயிருக்கின்றன. குற்றவாளிகளும், நாடோடிகளும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டிருக்கிறார்கள். சிறைச்சாலைகளிலும், வீதிகளிலும், சிகிச்சை சாலைகளிலும் கூட்டம் அதிகரிக்கிறது. மதம் துணையற்றதாயிருக்கிறது. சட்டம் தண்டிக்க முடியுமே தவிர குற்றங்களைத் தடுக்கவாவது அல்லது குற்றவாளிகளை சீர்திருத்தவாவது முடியாது. அக்கிரமம் அதிகமாகிறது, அக்கொடுமையுடனும் எதிர்த்துப் போராடுவதும் பயனற்றதாயிருக்கிறது. ஆனால் ஒரே ஒரு நம்பிக்கை இருக்கிறது. அறியாமையையும் வறுமையையும், பாபங்களையும் உலகில் பரவாத வண்ணம் தடுக்கவேண்டும். பிறரை வசப்படுத்தக்கூடிய ஒழுக்கங்களால் அவைகளைத் தடுக்க முடியாது. பேச்சுகளாலும் உதாரணங்களாலும் அவைகளைத் தடுக்க முடியாது. மதத்தாலும், சட்டத்தாலும், குருக்களாலும் அவைகளைத் தடுக்க முடியாது. தேவ சக்தியாலாவது அல்லது மனோசக்தியாலாவது இதைத் தடுக்க முடியாது. இதைத் தடுப்பதற்கு ஒரே ஒரு வழிதானிருக்கிறது. பெண்களெல்லாம் கல்வி சொரூபமாக வேண்டும். கல்வி ஒன்றே சன சமூகத்தைக் காப்பாற்றக் கூடியது. இதுவே நமது கேள்விக்குச் சரியான பதில். இதுவே பெண்களை அடிமையினின்றும் விடுவிக்கிறது. அப்பொழுது பிறக்கும் குழந்தைகளெல்லாம் வரவேற்கப்படும். அவைகள் அன்புடன் நேசிக்கப்படும். அவைகள் பெற்றோர்களுக்குச் சந்தோஷத்தைத் தரும்.

சுயேச்சையானவர்களை விட அடிமைகளே உண்மையானவர்களென்றும், அச்சமே அறிவைக்காட்டிலும் சிறந்ததென்றும், கட்டளைக்குக் கீழ்படிபவர்களே நல்லவர்களென்றும், அறியாமையிலிருந்தே நற்குணங்களெல்லாம் உண்டாகின்றனவென்றும் நம்புகிற ஆண் பெண் அனைவரும் ஓடி ஒளிந்து கொள்ளுவார்கள்.

ஆராய்ச்சி நல்லொழுக்கத்துக்கு விரோதமென்றும், அறியாமையில்தான் பரிசுத்தமிருக்கிறதென்றும், தன்னையே அறிந்து கொள்ளுவது மனிதர்களுக்கு ஆபத்தென்றும் எண்ணுகிறவர்களெல்லாம் அறிவே பக்தியைவிட சிறந்ததென்று சொல்லிய மாத்திரத்தில் திகிலடைந்து விடுவார்கள்.

ஆனால் எக்காலத்தில் ஆண் பெண் அனைவரும் மன ஆராய்ச்சியாலும் அறிவில் சிறந்த நல்லொழுக்கத்தாலும் துன்பங்களுக்கு ஆளாகாமலிருக்கிறார்களோ—தவறுதலடையாமலிருக்கிறார்களோ—அப்பேர்ப்பட்டதோர் காலத்தை நான் எதிர் பார்க்கிறேன்.

அந்தக்காலம் வரும்பொழுது சிறைச்சாலைகளெல்லாம் இல்லாதொழியும்; தூக்கு மேடைகளெல்லாம் அழிந்துபோகும்; வறுமையும் குற்றமும் பறந்தோடிப்போகும்; பிச்சைக்காரர்களெல்லாம் இருக்கமாட்டார்கள்; உலகம் முழுவதுமே அறிவாளியாகவும் யோக்கியமாகவும் சுயேச்சையாகவுமிருக்கும். மதமே அடிமையாயிருக்கும்பொழுது அது மனிதர்களை எவ்விதம் சீர்திருத்த முடியும். 'பய மென்னும் பேயை அடித்து" சுயேச்சையாய் ஆண்மையுடன் நிமிர்ந்து நின்று எதிர்காலத்தை இன்பமுடன் வரவேற்பது மேலானது. அப்பொழுது.

பராமுகமாய் இருக்கலாம்! அப்பொழுது மனோராஜ்யம் செய்யலாம்; மனக்கோட்டை கட்டலாம்; காரணகாரியங்களை மறந்திருக்கலாம்! அறிவின் வழியே சென்று பொழுது போக்கலாம்! இறந்த காலத்தை எண்ணி சந்தோஷமுறலாம்! கடவுள்களையும் அவரது கட்டளைகளையும் மறந்துவிடலாம்! பயமில்லாமல் இருக்கலாம்! இவைகளெல்லாம் மேலானவை.

பிறகு நீ, எல்லா காரியங்களையும் செய்ய ஆரம்பிப்பாய் உனது எண்ணப்படி நடப்பாய்! உலகத்தின் கண்ணுள்ள உண்மையை தேடுவாய்! அறிவை விருத்தி செய்வாய். ஏழைகளைக் காப்பாற்றுவாய்! உண்மையைக் காப்பாற்றுவாய்.

இதுவே உண்மை மதம். இதுவே நியாயமான ஆராதனையாகும். "திராவிடன்."

# ஒழுக்கமும் திருவள்ளுவரும்.

## கட்டுரை 15.

சாமி சிதம்பரனர் எழுதுவது.

ஒழுக்கம் என்பது, தான் இருக்கும்நிலைக்குத் தகுந்தவாறு நடந்து கொள்வதைக் குறிக்கும். அரசனாயிருக்கின்றவன் அவன் நிலைக்குத் தகுந்தவாறு தன் கடமையைச் செய்வதில் தவறாமல் ஒழுக வேண்டும். துறவியாயிருக்கின்றவன் தன் கடமையினின்றும் தவறாமல் ஒழுக வேண்டும். ஆசிரியனாயிருக்கின்றவன் தனக்குரிய முதன்மையான கடமையில் வழுவாமல் நடக்க வேண்டும். ஒழுங்கான வழியிற் செல்வதே ஒழுக்கமாகும். ஒழுங்கான வழியிற் செல்வோர்க்கு எப்பொழுதும் தீங்குண்டாகாது. ஒழுக்கமென்பதற்கு பரிமேலழகர் வருணாச்சிரம ஒழுக்கமென்றும் பொருள் கொள்கின்றார். ஆனால் திருவள்ளுவர்க்கு அது கருத்தன்று. அவர் ஒழுக்கத்தை ஒவ்வொருவர்க்கும்பிறப்புரிமையாகக் கொள்கின்றார்.

மற்றைய உயிர் வகைகளை விட மக்கள், உலகிற் சிறந்து விளங்குவதற்குக் காரணம், தக்க இன்ன தகாதன இன்ன வென்று ஆராய்ந்து நல்வழியில் நடக்குந் தன்மையுடையாராயிருத்தலே யாகும். இக்குணமில்லாத மக்கள் மக்களாக மாட்டார்கள் அவர்களை விலங்குகளென்று தான் கூற வேண்டும். இதனைத் "தக்கவின்ன தகாதன வின்னவென்றொக்க வுன்னலராயின், உயர்ந்துள மக்களும் விலங்கே" என்ற கம்பர் கவியாலுமறியலாம். ஆகவே மக்களுக்குச் சிறப்பை யளிப்பது ஒழுக்கமேயாகும். இதனை (1) "நல்லொழுக்கமே மக்களுக்குச் சிறப்பைத் தருவதால் அவ்வொழுக்கம் உயிரை விட மிகவுஞ் சிறந்ததாகக் காப்பாற்றுதற்குரியதாகும்" என்று திருவள்ளுவர் கூறுவதனால் அறியலாம்.

மனிதன் வேறு எந்தப் பொருள்களைத் தனக்குரிமையாகக் கொண்டு காப்பாற்றுவானாயினும் அவைகளாற் பெருமையடைய மாட்டான். நிறைந்த கல்வியும், சிறந்த செல்வமும் ஒழுக்கமில்லாவிடத்து பெருமை தரமாட்டா. பல வகையான அறங்களைத் தவறாமலாற்றினும் நல்லொழுக்கமில்லாவிடில உயர்வுண்டாகாது. ஆகையால் எத்தகைய பெருந்துன்பங்கள் நேரினும் நல்லொழுக்கத்தை விடாது காப்பாற்ற வேண்டும். இதனை (2) "வருந்தியும் விரும்பியும் நல்லொழுக்கத்தினைக் காப்பாற்றுக, அறங்களை ஆராய்ந்து அவற்றிற் சிறந்தனவற்றை விரும்பி மேற் கொண்டாலும் நல்லொழுக்கமே பெருமை யளிப்பதற்குத் துணையாகும்." என்று திருவள்ளுவர் கூறுவதால் அறியலாம்.

சில மக்களை உயர்ந்தவர்களென்று கூறுவதற்கும் சில மக்களை தாழ்ந்தவர்களென்று கூறுவதற்கும் ஒழுக்கமே காரணமாகும். இதை விடுத்துப் பிறப்பினால் உயர்வு கற்பிப்பதும தாழ்வு கற்பிப்பதும், குறும்புத்தனமும், அறிவீனமுமாகும். இக்காலத்தில் இனிய மொழிகளாலும், தந்நலங்கருதும் போலிப்புனைந்துரை நூல்களாலும், வஞ்சகமறியாத பொது மக்களையேமாற்றித் தமக்குப் பணியச்செய்து பொருள் பறித்து வயிறு வளர்ப்பவர்களையெல்லாம், "பெரியோர்களென்றும், உயர்குலத்தவர்களென்றும், நம்மவர்களிற் பலர் அறியாமையின் காரணமாக நம்பிக் கொண்டிருக்கின்றனர். தந்நலமும்வஞ்சகமுங்கொண்டவர்கள்ஒன்றுமறியாத ஏழை மக்களை இழிந்த குலத்தினராக நடத்துகின்றனர். இவையெல்லாம் திருவள்ளுவர் கருத்திற்கு மாறானதாம். திருவள்ளுவர் ஒழுக்கமுடைமையே உயர்குடியாகுமென்று கூறுகின்றார். இதனை (3) "ஒழுக்கமுடைமையே உயர்குடியாகும் தீயொழுக்கமுடைமை மக்கட்பிறப்பினின்றும் இழிந்த பிறப்பின் தன்மையைத் தந்து விடும்" என்பதனாலறியலாம். கல்வி பயின்று கொண்டிருக்கின்றவர்கள் தாங்கள் கற்கும் நூல்களை மறவாமலிருப்பதே நன்மையாகும். அதுவே கல்வியில் மேலும்மேலும் தேர்ச்சியடைவதற்குரிய வழியாகும். கற்கும் பொருள்களை மறந்து விடுங்கல்வி கல்வியாகாது. ஆயினும், மறந்த செய்திகளை மீண்டும் கற்று நினைவிற்கு கொண்டு வருதலுங் கூடும். ஆனால்மனிதப்பிறப்பிற்குரிய நல்லொழுக்கம் குன்றுமாயின் மனிதனுடைய தன்மையே குறைந்துவிடு மென்பதில் யாதோர் ஐயமுமில்லை. இதனை (4) "மறந்துவிடினும் மீண்டும் நூல்களைக்கற்றுக் கொள்ளலாம் படிக்கின்றவன். ஆனால் மனிதப்பிறப்பிற்குரிய ஒழுக்கம் குன்றுமாயின் மனிதப்பிறவியின் உயர்ந்த தன்மையே கெட்டுப்போகும்" என்று திருவள்ளுவர் கூறுவதனால் உணரக்கிடக்கின்றது.

மனவமைதியே யாவற்றிற்குஞ் சிறந்த செல்வமாகும் மனவமைதியற்ற மாந்தர்கட்கு எவ்வளவு செல்வமிருப்பினும் இன்பமில்லை. மனவமைதிதான் வாழ்க்கையில் இன்பமளிப்பதாகும் இதனைப் "போது மென்ற மனமே பொன்செய்யு மருந்து" என்ற பழமொழியும் உணர்த்தி நிற்கிறது, மனவமைதியின்மைக்கு முதன்மையான காரணம் பொறாமை தான் என்பதை "ஒழுக்கமும் திருவள்ளுவரும்" என்ற கட்டுரையில் உணரலாம். பொறாமை யுடையவர்களுக்கு ஒரு சிறிதும் செல்வமென்பது நிலைத்திராது. அவர்களிடம் நிலைத்திருக்கும் செல்வமும் அடியோடொழிந்து போகும். அதுபோலவே நல்லொழுக்கமில்லாதவன் பால் உயர்வென்பது ஒரு சிறிதுங் காணப்படாதொழியுமென்று திருவள்ளுவர் கூறுகின்றார். இதனை(5) "பொறாமை யுடையவனிடத்தில் செல்வம் நிலைத்திராதது போல ஒழுக்கமில்லாதவனிடம் மனிதப்பிறப்பிற்குரிய உயர்வு நிலைத்திராது" என்னுங்குறளால் அறியலாம்.

மனவலிமை யாவற்றும் இன்றியமையாததாகும். மனவலிமை யுடையவர்களாலேயே எச்செயலையும் எளிதாக முற்றுப்பெறச் செய்ய முடியும். ஒழுக்கத்திற்கும மனவலிமையே காரணமாகும். மனவலிமையுடையவர்கள் எக்காலத்திலும் எப்பொருட்டினாலும் நல்லொழுக்கத்தினின்றுந் தவறி நடக்கமாட்டார்கள். மேற்கண்ட கொள்கையை நிறைவேற்றுவது தான் வீரமும், ஆண் தன்மையும் ஆகும். ஒழுக்கத்தின் மேன்மையை யுணர்ந்த மனவலிமையை யுடையவர்கள் தீயொழுக்கத்தினால் உண்டாகும் தீமையை உணர்ந்து நல்லொழுக்கத்தினின்றுந் தவறமாட்டார்கள். இதனை (6) மனவலிமை யுடையவர்கள் ஒழுக்கமில்லாமையால் வரும் குற்றத்தையுணர்ந்து "ஒழுக்கத்திற் சிறிதுங் குறைய மாட்டார்கள் என்னுந் திருக்குறளாலுணரலாம்.

யாவருக்கும் மேன்மை யுண்டாவதற்குக் காரணம் ஒழுக்கமேயாகும் ஒழுக்க முடையவர்களுக்கே எல்லாச் சிறந்த குணங்களும் செயல்களும், உரித்தானதாகும். அதுபோலவே தீயொழுக்க முடையவர்கட்குத் தனக்குரியமையல்லாத பெரும் பழிகளெல்லாம் வந்து சேரும் இதனை (7) "ஒழுக்கத்தினால் மேன்மையடைவார்கள்; ஒழுக்கமில்லாமையால் தனக்குரிமையல்லாத பெரும்பழிகளை அடைவார்கள்" என்னுந் திருக்குறளால் அறியலாம்.

ஒருவன் நன்மையடைய வேண்டுமாயின் நல்லொழுக்கம் ஒன்றினாலேயே நன்மையடைய வேண்டும். எல்லா நன்மைக்கும் அதுவே முதற்காரணமாகும். அதுவே இடைவிடாத நன்மையையளித்துக்கொண்டிருக்கும். ஆனால் நல்லொழுக்கத்திற்குமாறுபட்ட தீயொழுக்கமோ எப்பொழுதும் அதனை மேற் கொண்டவர்களுக்குத் தீமையைத்தான் கொடுத்துக் கொண்டிருக்கும். (8) "நன்மைக்கு விதையாகும் நல்லொழுக்கம். தீயொழுக்கம் எப்பொழுதும் துன்பத்தைக் கொடுக்கும்" என்னுந் திருவள்ளுவர் சொல்லாலறியலாம்.

யாவருக்கும் மனமுஞ் சொல்லும் செயலும் தூய்மையாக விருத்தல் வேண்டும். மனத்தால் தீயவற்றைச் சிந்தியாமலிருப்பதும் நல்லொழுக்கம். சொல்லாற்றீய மொழிகளைப் புகலாதிருப்பதும் சீரிய ஒழுக்கம். மெய்யாற் கெட்ட செயல்களை யாற்றாதிருப்பதும் மேலான ஒழுக்கம். இம்மூன்றினும் தலைசிறந்தது சொல்லாகும். ஒருவருடைய சொல்லைக் கொண்டே அவர் நல்லொழுக்கமுடையவரா தீயொழுக்கமுடையவரா என்பதை அறியலாம். எவ்வாறெனில், மனம் நினைத்ததைத்தான் வாய் உரைக்க முற்படும். மனத்திலுள்ளதை உள்ளபடியே வாயினாற் சொல்லாவிடினும் எப்பொழுதாவது ஒரு சமயம் உண்மையைக் கூறுமாறு நேர்ந்துவிடும். ஆகையால் சொல்லைக் கொண்டு மனத்தின் தன்மையை உணரலாம். சொல்லைக்கொண்டே செயலையும் அறியலாம். பின்னால் செய்யப்போகுஞ் செயலுக்குத் தகுந்தவாறே சொற்கள் முதலிற்றோன்றும். ஆகையால் நல்லொழுக்க முடையவர்கள் தவறியும் தீய சொற்களை வாயினாற் கூறமாட்டார்களாம். இதனை (9) "தீய சொற்களைத் தவறியும் வாயினாற் சொல்லுந் தொழில் நல்லொழுக்கமுடையவர்களுக்கு முடியாது" என்னுங் குறளாலறியலாம்.

பேரறிவுடைமைக்கு அடையாளம் உலகத்தோடு பொருந்த ஒழுகுதலாகும். பொ

இதன் தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

கோயமுத்தூருக்கடுத்த காரமடையில புதிதாக ஏற்படுத்தப்பெறும்
ஒக்கலிகக் கவுண்டர்கள் வகுப்பின் மாணவர்விடுதித்
திறப்பு விழாவிற்கு தலைமை வகித்த
"குடி அரசு" ஆசிரியர்

## உயர்திரு ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களுக்கு,

மேற்படி சமூகப்பிரமுகர்களால் வாசித்துக் கொடுத்த

## உபசாரப்பத்திரம்.

1. வருக! வருக! வள்ளலே வருக! வாய்மை மாறாத மன்னனே வருக! அறவழியலாது பிறவழியறியா அரும் பெரும் புஜ்ஜியர் திருமிகு வெங்கிட்ட நாயக்கர் அவர்கள் மெய்த்தவமே வருக! சுயநலக் காரர்கள் வசம் காங்கிரஸ் உள்படும்வரையில், உண்மையான காங்கிரஸ் தலைவராகவிருந்து உலகம் பெரியார் காந்தியடிகளின் வழி நின்று, ஒத்துழையாமை மேற் கொண்டு, சிறையும் சென்று நம் தேச விடுதலைக்காக தாங்கள் பட்ட கஷ்ட நஷ்டங்கள் அளவிட முடியுமோ! அண்ணலே! தேசபக்தி யென்பதையே அறியாமலிருந்த அநேக மக்களுக்கு தாங்கள் தலைவராயமர்ந்து தங்களின் தியாகத்தாலும் உழைப்பினாலும் விடுதலை உணர்ச்சியை உண்டு செய்து, பொதுவாகத் தமிழ்நாட்டை, சிறப்பாகத் தங்கள் தொல்பதியாகிய ஈரோட்டை, மற்றொரு 'பர்தோலி' யென்ற, தேசத் தலைவர்கள் புகழும்படியாகச் செய்த தங்கள் பெருமையை எளிதில் மறந்துவிட முடியுமோ?

2. அன்பென்னும் சாகரமே! தாங்கள் அளவிட முடியாத செல்வ வந்தராக இருந்தும் எப்போதும் உயர்வு தாழ்வற்ற சமத்துவ ஞானியாய் தாழ்த்தப்பட்டோர் தீண்டப்படாதார் என்று ஒதுக்கப்பட்டவர்களின் உரிமைக்காக தாங்கள் இரவும் பகலும் உழைத்து வருவதுமன்றி, தங்கள் தர்மபத்தினியாருடன் வைக்கம் சென்று சத்தியாக்கிரகப்போர் நடத்தி மும்முறை சிறை சென்று கடவுளால் படைக்கப்பெற்ற மக்களில் ஏற்றத்தாழ்வில்லை யென்பதை உலகத்தாருக்கு மெய்ப்பித்து வெற்றியுடன் வெளிவந்து, 'வைக்கம் வீரர்' என்று காரணப்பெயரும் சூடப்பெற்ற கண்ணியரே! தாங்கள் பல நூற்றாண்டுகளாக நமது சகோதரிகளாகிய பெண்மக்கள் அடிமைகள் அல்லது புத்திரர்களைப் பெறும் யந்திரம் என்று நினைத்துக் கொண்டிருக்கும் அறியாமையைப் போக்க தாங்கள் எடுத்துக் கொண்டிருக்கும் ஊக்கத்தை எங்களால் சொல்லுந்தரமோ!

3 சத்தியத்தின் தத்துவமே! பிரிட்டானியம் என்னும் பெயரால் அதிகார வர்க்கங்கள் செய்யும் அட்டூழியத்தையும் பிராமணியமென்னும் பெயரால் குருமார், புரோகிதர், அர்ச்சகர், என்று பெயர்வைத்துக் கொண்டிருக்கும் சில கூட்டத்தாராகிய பார்ப்பனர்களால் நடக்கும் கொடுமைகளையும் சகிக்காது தாங்கள் புத்தசாக்கியரைப் போல அவதரித்து புராணம இதிகாசம் என்னும் பொய்க்கூற்றுகளை, தங்கள் 'குடி அரசு' என்னும் கோடாரியால் வெட்டித் தகர்த்து மக்களை மூடநம்பிக்கையிலிருந்து விழித்தெழும்படி செய்து பிறப்புரிமையாகிய சுயமரியாதை யென்னும் அரிய மாணிக்கத்தை உலகமெல்லாம் பரப்பி வருவதைக் கண்டு பொதுவாக நமது தேசமக்களும் சிறப்பாக பார்ப்பனரல்லாதார்களும் தங்களுக்கென்றும் நன்றி செய்யக்கடமைப் பட்டிருக்கிறார்கள்.

4. உண்மையின் உறைவிடமே! கடந்த மூன்று வருஷங்களுக்குள் புதைபட்டிருந்த பொக்கிஷமாகிய சுயமரியாதையை மக்களுக்குள் கிளப்பி வருவதையும், மணிக்கணக்காகக் கல்லும் கரையும்படி இனிமையாகப் பேசக்கூடிய ஆற்றலையும், சொற்சுவை பொருட்சுவையோடு தங்களால் எழுதப் பெறும் பெருமைவாய்ந்த தங்கள் 'குடிஅரசு' பத்திரிகையையும் கண்டு பல சுயநலமிகள் தங்களுக்குக் குறுக்கே நின்று ஆரம்ப முதலே மறித்து வருவது எங்களுக்குத் தெரியும். ஆயினும், உதிக்கும் சூரியனை எப்படிக் கை கொண்டு மறைக்க முடியாதோ அது போல கால சக்கிரத்தால் இயற்கை வடிவாக வந்திருக்கும் தங்கள் இயக்கத்தைத் தடுக்க முடியாமற் போனதோடு அடிக்க அடிக்க உயரும் ரப்பர் பந்துபோல் தங்களுக்குள்ள செல்வாக்கு அதிகரிக்க, தங்களுடைய கொள்கையை மகா ஜனங்கள் அன்புடன் வரவேற்கிறார்கள் என்பதற்கு, நடந்த மூன்றாண்டுகளில் தங்கள் பெருமைவாய்ந்த 'குடி அரசு' பத்திரிகை வாரம் ஏழாயிரம் பிரதிக்குமேல் அச்சிடப்பட்டு வருவதோடு இன்னும் அதிகரித்துக்கொண்டே யிருப்பதும், கிராமங்கள் முதல் நகரங்கள் உள்ளாகவும், பாமரர் முதல் பணக்காரர் வரையிலும் ஆண் பெண் இருபாலரும் கரும்பை நுனியிருந்து அடிவரை கடிப்பதுபோல ருசிகரமாய்ப்படித்து சுயமரியாதை வீரர்களாய்க்கொண்டு வருவதுவே போதிய சான்றாகும். அதுமட்டுமல்ல, சமீபத்தில் தாங்கள் சுவீகரித்துக்கொண்டிருக்கும் 'திராவிடன்' தமிழ் தினசரி பத்திரிகைக்கு இரண்டே தினங்களில் இரட்டிப்பான சந்தாதாரர்கள் சேர்ந்திருப்பதும், புதிதாக ஆங்கிலத்தில் தாங்கள் வெளியிடவிருக்கும் 'ரிவோல்ட்' என்னும் வாரப்பத்திரிகைக்கு நாலாபக்கங்களிருந்தும் சந்தாதாரர்கள் பதிவு செய்துகொண்டு வருவதும் தங்கள்பால் தேசமக்களுக்குள்ள நன்மதிப்பைக் காட்டுகிறதன்றோ.

5. வயிரத்தின் மணிக்குன்றே! பார்ப்பனரல்லாதார்கள் நடத்தும், மண முதலிய சடங்குகளுக்கு பார்ப்பன புரோகிதர்களைக்கொண்டு நடத்திவந்த அடிமை மூடவழக்கங்கள் தங்களுடையவும் 'குடி அரசி'னுடையவும் அளவிடமுடியாத பிரசாரத்தினால் பார்ப்பனரல்லாதார்கள் தங்களுக்குள் தாங்களே சடங்குகளைச் செய்துகொண்டு சுயமரியாதை பெற்று வந்துகொண்டிருப்பதற்கும், சூத்திரன் அடிமை யென்னும் இழிசொற்கள் நமநாட்டைவிட்டு ஓட்டிவிட்டதற்கும் பார்ப்பனரல்லாதார் தங்களுக்குச் செய்யக்கூடிய நன்றியும் ஒன்றுளதோ.

6. காண்டரு மாண்புடையீர்! தங்களை சாதாரணமான மனிதர் என்பதாக நினைப்பதற்கில்லாமல் சமத்வமும் சகோதரத்வமும் ஆண்மையும் அறிவும் மக்களுக்குப் போதிக்க எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளால் அனுப்பப்பட்டதொரு தீர்க்கதரிசி அவதார புருஷரென்றே நினைக்கின்றோம். பின்னால் மகா புருஷர் சரித்திரம் எழுதுங்காலத்தில் தங்களின் பெயர் ஞாபகமாக இருக்குமென்று நிர் ஆக்ஷேபனையாகச் சொல்லுகிறோம்.

7. வைக்கம் வீரர் அவர்களே! 'குடி அரசு' பத்திராதிபர்களே! ஈ. வெ. ராமசாமி நாயக்கரவர்களே! தங்களுக்கு ஒரு விநாடிக்கு விலைமதிக்கமுடியாத பல வேலைகளினிடையே எங்கள் வேண்டுகோளைப் பெரிதாக மதித்து இங்கு எங்களை கௌரவித்தருளிய தங்களுக்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்யவல்லோம். எல்லாம் வல்ல முழுமுதற்கடவுள் தங்களுக்கு நீண்ட ஆயுளும் தேகாரோக்யமும் மனோதிடமும் கொடுத்தருளவேணுமாய் பிரார்த்தித்து நிற்கும் எங்களது இச்சிறு விடுதியை தாங்கள் அன்புடன் திறந்துவைத்து ஆசீர்வதிக்கவேண்டுமாய் பணிவுடன் விண்ணப்பித்து தங்களுக்கு நல்வரவு கூறுகிறோம். சுபம்!

காரமடை
20—6—28

இங்ஙனம்,
ஒக்கிலிய மகா ஜனங்கள்.

## வசிஷ்டரும் சுபகாரியங்களும்.

10-6-28ல் லால்குடியில் கூடிய சுயமரியாதை மகாநாட்டில் ஒவ்வொரு சுயமரியாதையுள்ளவர்களும் பார்ப்பனர்களின் சூட்சியை ஷெயார்களின் முன்னோர்கள் எழுதி வைத்த மனுதர்ம சாஸ்திரத்தைக் கொண்டே பொது ஜனங்களுக்கு எடுத்துக் காண்பித்து சுயமரியாதை இயக்கம் இன்னதென்பதை விளக்கிக் கூறினதானது ஒவ்வொருவர் மனதிலும் நன்றாய்ப் பதிந்துவிட்டதென்றே நினைக்கிறேன் ஏனெனில் பார்ப்பனர்களுக்கு வரிகொடுப்பதில் அதிகப் பிரியமுள்ள நானே பார்ப்பனக் கொடுமையின் சூழ்ச்சியை யொழித்து சுயமரியாதை இயக்கத்தில் இறங்கிவிட்டேனென்றால் மற்றவர்களைப்பற்றி அதிகம சொல்லவேண்டியதில்லை.

திரு. ஜே. எஸ். ராமனுதன் அவர்கள் நிகழ்த்திய உபந்யாசத்தில் பார்ப்பனர்களின் முன்னோர்களில் ஒருவராகிய வசிஷ்டருக்குப் பெருமை கொடுத்திருக்கிறார். அந்த விஷயம் என்போன்றவர்களுக்கு அருவருப்பாயிருக்குமென்றே எண்ணுகிறேன். அதாவது சுயமரியாதையுள்ள ஒவ்வொருவரும் சுபாசுப காரியங்களில் பார்ப்பானை ஒழித்து நடத்த வேண்டுமென்று வற்புறுத்திப் பேசியவர், "ஸ்ரீ ராமபிரானுக்கும் சீதாவுக்கும் நடந்த விவாகத்தில் யார் புரோகிதர்? வசிஷ்டர்; அவர் பெண்ஜாதியார்? சக்கிலிச்சி. அந்த கையவரிருந்தால் அவரை வைத்துக் கொண்டு விவாகம் நடத்தினால் நம் பெண்கள் மூன்றாம் நாள் தாலியறுத்து விடாது; க்ஷேமமாயிருக்கும்" என்று பேசியிருக்கிறார். ஆனால் அந்த வசிஷ்டர் புரோகிதஞ் செய்து நடத்திய விவாகம் மட்டும் என்ன வாழ்ந்ததென்பது தான் என்னுடைய கேள்வி. ராமர் கானகஞ் சென்றிருக்கையில் சீதை ராமரைப் பிரிந்து, தாலி யறுத்தவள் படுந்துயரத்திற்கு மேலான துயரமடையவில்லையா? ராமருக்கு முடி சூட்ட லெக்னம் வைத்துக் கொடுத்தவர் வசிஷ்டர்தானே. அது என்னவாயிற்று? மகுடாபிஷேகம் செய்து குதூகலப் படவேண்டிய அதே முகூர்த்தத்தில் சக்கரவர்த்தி இறந்து அரண்மனைப் பட்டணமும் எங்கும் அழுதரலாய் முடியவில்லையா? அப்படியிருக்க வசிஷ்டர் போன்ற [illegible]யோர்களை எங்ஙனம் புகழ்வது? அவ்வகுப்பினரை அறவே ஒழித்து எவ்வித புரோகிதமும் இல்லாமல் நம் சுயமரியாதையை நிலைநிறுத்த வேண்டுமென்றே நான் வற்புறுத்திச் சொல்லுகிறேன்.

பி. உலகநாதன்.

கோடை கடுங்கோடை

## தைலஸ்நானத்தால் மூளையைப் பாதுகாருங்கள்.

# பிருங்காமலக தைலம்.

இவ்வுயர்ந்த தைலத்தில் கையாந்தகரை, பொன்னாங்காணி, கீழ்வாய்நெல்லி, நெல்லிக்காய், கற்றாழை விழுது முதலியவைகளின் இரசங்களும், சுகந்த மூலத் திரவியங்களும், வாசனைத் திரவியங்களும் சேர்க்கப் பட்டிருக்கிறது. உயர்ந்த தைலம். கண்களுக்கு குளிர்ச்சியை உண்டாக்கும்.

கண் புகைச்சல், கண்ணெரிவு, பாலிய நரை, சிரசிலுள்ள மயக்கம், மண்டைக் கரப்பான், காதில் சீழ் வடிதல், மேக ரோகங்கள் முதலியன நீங்கும். மூளைக் கொதிப்பு, பைத்தியம் நீங்கும். மயிர் உதிர்தலை நீக்கி கூந்தலை வளரச் செய்யும். மாணவர்கள், மனோ முயற்சி உடையவர்கள் முதலியவர்களுக்கு அவசியமானது. 10 அவுன்ஸ் விலை ரூ. 2—0—0. 5 அவுன்ஸ் விலை ரூ. 1—1—0.

## பஞ்சாமிர்த கிருதம் (குழந்தைகட்கும் பெரியவர்கட்கும்).

அதிக இனிப்புள்ள இக்கிருதத்தை தினம் காலை மாலை சாப்பிட்டுவந்தால் கணைச்சூடு, மார்பு பின்னல், சரீரம் இளைத்தல், வறட்சி, மலச்சிக்கல் முதலியவைகள் நீக்கி, சரீர புஷ்டியையும் அழகையும் உண்டாக்கும். வெட்டைச்சூடு, சரீரம் இளைத்தல், அதிக பலஹீனம், மேக உஷ்ணம் முதலியவைகள் உடைய ஸ்திரீ புருஷர்கள் இதைச் சாப்பிட்டால் சரீரம் குளிர்ந்து பலமும் அழகும் உண்டாகும்.

15 நாள் சாப்பிடக்கூடிய டப்பி 1-க்கு ரூ. 1—10—0. 1 மாதம் சாப்பிடக்கூடிய டப்பி 1-க்கு ரூ. 3—0—0.

## மதனாமிர்தம். (தாதுவிர்த்திக்கு உயர்ந்த மருந்து.)

இதில் ஜாலாமிஸ்ரி, ஷகாகுல்மஸ்ரி, நத்தைச்சூரி விரை, கஸ்தூரி முதலிய உயர்ந்த சரக்குகளும, பழங்களும் சேர்த்து செய்யப்பட்டிருக்கிறது. சுறுசுறுப்புக் குறைவு, ஹிருதயத் துடிப்பு, நரம்புத்தளர்ச்சி, வெட்டைச் சூடு முதலியன நீங்கும். நீர்ப்பை, குண்டிக் காய்கள் ஆகியவைகளின் சீர்கேடுகள் நீங்கும். மூளை, ஹிருதயம் முதலியவைகட்கு வலுவை உண்டாக்கும். தாதுவிர்த்தியை உண்டாக்கும்.

15 நாள் சாப்பிடக்கூடிய டப்பி 1-க்கு ரூ. 1—10—0. 1 மாதம் சாப்பிடக்கூடிய டப்பி 1-க்கு ரூ. 3—0—0.

## நற்சாக்ஷிகள்.

சீர்காழி பண்டிதர் சி. வ. ஞானசம்பந்தம் அவர்களை நான் 10 வருஷங்களுக்கு மேலாக அறிவேன். எனது குழந்தை இராஜகோபாலனுக்கு கணைச்சூடும் மூலச்சூடுமாக அதிக இளைத்துப் போயிருக்கும்போது இவரது பஞ்சாமிர்த கிருதத்தை உபயோகித்ததில் சகல உஷ்ணமும் நீங்கி உடம்பு புஷ்டியும் பலமும் உண்டானது. இது ஓர் நல்ல இனிமையான மருந்து. இவரது பிருங்காமல தைலம் கபால உஷ்ணத்தை நீக்குகிறது. நல்ல குளிர்ச்சியாக இருக்கிறது. நேத்திர ரோகங்களை கண்டிக்கிறது. மதனாமிர்த லேகியம், தங்கம் சேர்ந்த இராஜ மதனாமிர்தம் இவைகள் அதிக தாதுபுஷ்டியை உண்டாக்குவதில் முதன்மையானதென்பதில் ஐயமில்லை. ஓர் முறை வாங்கி உபயோகித்தவர்கள் அதனை மறுபடியும் உபயோகிக்க எண்ணுவார்களென்பது திண்ணம். (ஒப்பம்) நாராயணசுவாமி அய்யர்,

மானேஜர், தேவஸ்தானம், கோவில் திருமாளம், (தஞ்சை ஜில்லா) பூந்தோட்டம். 1—2—28

சீர்காழியில் பரம்பரை பிரபல வைத்திய குடும்பத்தைச் சேர்ந்த பண்டிட் சி. வா. ஞானசம்பந்தம் அவர்களை நான் இருபது வருஷமாக அறிவேன். எனது நண்பர் ஒருவருக்கு மேக விஷ நீர் சம்பந்தமான சிரந்தி ரோகத்தை கஸ்தூரி எண்ணை கிரந்தி மாத்திரை இவைகளால் 1918ம்வருஷத்தில் இவர் குணப்படுத்தியிருக்கிறார். இவரது தங்கம் சேர்ந்த இராஜ மதனாமிர்தம், மதனாமிர்தம் இவைகள் நரம்புகளுக்கு முறுக்கேற்றி இந்திரிய வலுவை உண்டாக்குவதால் முதன்மையானதென்பதில் சந்தேகமில்லை. இவர்களால் நீண்ட காலமாக தயார் செய்யப்படும் பிருங்காமலக தைலம் சிரசிலுள்ள உஷ்ணத்தை நீக்கி கண்களுக்கு உணர்ச்சியை உண்டாக்குகிறது.

(ஒப்பம்) மு. செல்லையா ஆசாரி, தேவஸ்தானம் திருப்பணிஸ்தபதி, திருமாளம், அடியக் போஸ்டு. 3-3-28.

சீர்காழி பண்டிதர் ஞானசம்பந்தம் அவர்களின் பிருங்காமலக தைலம் பைத்தியத்தை நீக்கியிருக்கிறது.

(ஒப்பம்) ஆர். இராஜகோபால் அய்யங்கார் பி. ஏ. அஸிஸ்டெண்டு உபாத்தியாயர், பி. எஸ். ஹைஸ்கூல், மைலாப்பூர், சென்னை.

சீர்காழி பண்டிதர் சி. வா. ஞானசம்பந்தம் அவர்களின் பிருங்காமலக தைலத்தை நான் உபயோகித்து இருக்கிறேன். அது மூளைக்கு குளிர்ச்சியை உண்டு பண்ணுகிறது. அதன் குணம், மணம் இவை உயர்ந்ததாக இருக்கிறது. இவரது நவநீதாஞ்சனம் மார்க்கட்டில் அதிக விலைக்கு விற்கிற மற்ற அஞ்சனங்களைவிட உயர்ந்தது. குறைந்த விலையையுடைய இவரது நவநீதாஞ்சனம் இவர் சொல்லுகிற எல்லாக் குணங்களையும் பெற்றிருக்கிறது. இவரது சிறு சந்தனாதி தைலம் நித்தியப்படி உபயோகிப்பதற்கு ஏற்றதும் உயர்ந்த குணமும் உள்ளது.

(ஒப்பம்) ஆர். பார்த்தசாரதி அய்யங்கார் பி. ஏ. எல். டி. சீப் அஸிஸ்டெண்டு, இராமசாமி செட்டியார் டவுன் ஹைஸ்கூல், சிதம்பரம். (S. i. r.) 13—3—28.


சீர்காழி பண்டிதர் சி. வா. ஞானசம்பந்தம் அவர்கட்கு, மதனாமிர்த லேகியத்தை நான் சாப்பிட்டதில் எனக்கு ஏற்பட்டிருந்த வெட்டைச்சூடு, நீர் எரிச்சல் சவுக்கியப்பட்டதுடன் ஸ்திரிகளுக்கு கொடுத்ததில் சூதகவிராணிப் போக்கு சவுக்கியமாயிருக்கிறது.

(ஒப்பம்) தஞ்சை, சாம்பசிவ அய்யர், கோவில் திருமாளம், பூந்தோட்டம். 15—3—28.

நான் படையினால் இருபது வருஷகாலமாக அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்ததை தங்கள் சர்வபடை நிவாரணி நீக்கிவிட்டது. இதுவே ஔஷதம். (ஒப்பம்) கு. கந்தசாமி பிள்ளை, கொவில் திருமாளம், பூந்தோட்டம். 19—3—28.

# பண்டிட் சி. வ. ஞானசம்பந்தம்,

## ஸ்ரீரட்சாமிர்த இராஜ வைத்தியசாலை, சீகாழி. (S. I. R.)



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.


# குடி அரசு

ஈரோடு விபவ-ஹு ஆனி மீ 18-உ


## சாமியும், சமயமும், சமயாச்சாரியார்களும்.

தேவர்கள் என்றும் தெய்வங்கள் என்றும் அவதாரமென்றும் ரூபமென்றும் அதற்காக மதமென்றும் சமயமென்றும் அதற்காக மதாச்சாரியர்கள் என்றும் அதற்கு சமயாச்சாரியர்கள் என்றும் கட்டியழுபவர்கள் ஒன்று வயிற்றுப்பிழைப்பு புரட்டர்களாயிருக்க வேண்டும் அல்லது பகுத்தறிவில்லாதவர்களாகவாவது இருக்க வேண்டும் என்பதே நமது அபிப்பிராயம் என்பதாக பல தடவைகளில் வெளிப்படுத்தி இருக்கின்றோம்.

அது போலவே சிவன் என்றோ, விஷ்ணு என்றோ, பிரம்மா என்றோ சொல்லப்படுபவையும் ஒரு "சாமி" என்றோ அல்லது ஒரு ஆசாமி என்றோ அல்லது ஒரு உருவமென்றோ கொள்ளுவதும் ஞானமற்றவர்களின் கொள்கையென்றே சொல்லுவோம்.

உலகத்தோற்றமும், அதில் நடைபெறும் உற்பத்தி, வாழ்வு, அழிவு என்பவைகளான மூவகைத் தன்மைகளையும், ஷை "சாமி"களோ ஆசாமிகளோ ஒவ்வொரு தன்மையை ஒவ்வொரு ஆசாமி நடத்துகிறான் என்றோ அல்லது ஒவ்வொரு தன்மைக்கு ஒவ்வொரு ஆசாமி பொறுப்பாளியாய் இருக்கின்றான் என்றோ நினைத்துக் கொண்டிருப்பவர்களும் விசார ஞானமற்றவர்கள் என்றே சொல்லுவோம்.

மற்றபடி மேல்கண்ட ஒவ்வொரு தன்மைக்கு மேல்கண்ட ஒவ்வொரு பெயர் வைக்கப் பட்டிருக்கின்றது என்றும், அது ஒரு உருவமல்ல, ஒரு உருப்படி அல்ல என்றும், உற்பத்தி, வாழ்வு, அழிவு என்னும் தன்மையையும் அத்தன்மைக்கு ஆதாரமான தோற்றங்களைத்தான் கடவுள் என்றோ, தெய்வம் என்றோ, சாமி என்றோ, ஆண்டவன் என்றோ கருதுகிறோம் என்பதாகவும், தானாகத் தோன்றி, தானாக வாழ்ந்து, தானாக அழிகின்றது என்கின்ற பாவம் இயற்கைதான் என்றும், அவ்வியற்கைக்குத்தான் கடவுள், ஆண்டவன், சாமி, தெய்வம் என்று சொல்லுகின்றோம் என்பதாகவும், மற்றும் இவ்வியற்கைத் தோற்றங்களுக்கு ஏதாவது ஒரு காரணமோ அல்லது ஒரு சக்தியோ இருக்க வேண்டுமே என்றும் அந்த காரணத்திற்கோ சக்திக்கோதான் கடவுள், சாமி, ஆண்டவன், தெய்வம் என்கின்ற பெயர் கொடுக்கப் பட்டிருக்கின்றது என்பதாகவும் சொல்லிக் கொண்டு மாத்திரம் இருப்பவர்களிடத்தில் நமக்கு இப்போது அவ்வளவாக தகரார் இல்லை என்று சொல்லிக் கொள்ளுகின்றோம்.

ஆனால் அந்தக்கடவுளுக்கு கண், மூக்கு, வாய், கை, கால், தலை, பெயர், ஆண் பெண் தன்மை, பெண்ஜாதி புருஷன், குழந்தை குட்டி, தாய் தகப்பன் முதலியவைகளை கற்பித்து, அதனிடத்தில் பக்தி செய்ய வேண்டும் என்றும், அதற்கு கோவில்கட்டி கும்பாபிஷேகம் செய்து தினம் பலவேளை பூசை செய்ய வேண்டும் என்றும் அச்சாமிகளுக்கு கல்யாணம் முதலியவைகள் செய்ய வேண்டும் என்றும், அந்தக் கடவுள் அப்படிச் செய்தார், இந்தக் கடவுள் இப்படிச் செய்தார் என்பதான "திருவிளையாடல்கள்" முதலியவைகள் செய்து காட்ட வருஷா வருஷம் உற்சவம் செய்ய வேண்டும் என்றும், அக்கடவுள்களின் பெருமையைப் பற்றியும் திருவிளையாடல்களைப்பற்றியும் பாட வேண்டும் என்றும், அப்பாடல்களை 'வேதமாக' 'திருமுறையாக' 'பிரபந்தமாக' கடவுள் உண்டு என்பதற்கு ஆதாரமாக கொள்ள வேண்டும் என்றும், அப்பாடல்களைப் பாடினவர்களை 'சமயாச்சாரியர்'களாக 'ஆழ்வார்'களாக 'சமயகுரவர்'களாக 'நாயன்மார்'களாக பல அற்புதங்கள் செய்தவர்களாகக் கொள்ள வேண்டும் என்றும், இது போன்ற இன்னும் பல செய்தால் அக்கடவுள்கள் நமது இச்சைகளை நிறைவேற்றுவார்கள் என்றும், மற்றும் நாம் செய்த செய்கின்ற செய்யப்போகின்ற எவ்வித அக்கிரமங்களையும் அயோக்கியத்தனங்களையும் கொடுமைகளையும் மன்னிப்பார் என்றும் சொல்லப்படுபவைகளான மூட நம்பிக்கையும் வயிற்றுப்பிழைப்பு சுயநலப்பிரசாரமும் ஒழிய வேண்டுமென்பதுதான் நமது கவலை. ஏனெனில் இந்நாட்டில் பார்ப்பன ஆதிக்கத்திற்கும், மக்களை மக்கள் ஏமாற்றிக் கொடுமைபடுத்துவதற்கும், மற்ற நாட்டார்கள் போல நம் நாட்டு மக்களுக்கு பகுத்தறிவு விசாலப்பட்டு மற்ற நாட்டார்களைப் போல விஞ்ஞான (சையன்ஸ்) சாஸ்திரத்திலே முன்னேற்றமடையாமல் இருப்பதற்கும், அன்னிய ஆட்சிக் கொடுமையிலிருந்து தப்பமுடியாமல் வைத்த பளுவைச் சுமக்க முதுகைக் குனிந்து கொடுத்துக் கொண்டிருப்பதற்கும் இம்மூடநம்பிக்கையும் சில சுயநலமிகளின் வயிற்றுச் சோற்றுப் பிரசாரமும் இவைகளினால் ஏற்பட்ட கண்மூடி வழக்கங்களுமே செலவுகளுமேதான் காரணங்கள் என்பதாக நாம் முடிவு செய்து கொண்டிருக்கின்றோம். நாமும் நமது நாடும் அடிமைப் பட்டுக் கிடப்பதற்கும், ஒருவரையொருவர் உயர்வு தாழ்வு கற்பித்துக் கொடுமைப் படுத்தி ஒற்றுமையில்லாமல் செய்திருப்பதற்கும், மக்கள் பாடுபட்டுச் சம்பாதிக்கும் பொருள்கள் எல்லாம் நாட்டின் முன்னேற்றத்திற்கு பலன்படாமல் பாழாவதற்கும், மக்களின் அறிவு வளர்ச்சி கட்டுப்பட்டுக் கிடப்பதற்கும், சிறப்பாக மக்களின் ஒழுக்கங்கள் குன்றி மக்களிடத்தில் மக்களுக்கு அன்பும், உபகாரமும் இல்லாமல் இருப்பதற்கும் மேல்கண்ட கொள்கைகள் கொண்ட கடவுள் என்பதும், அதன் சமயமும் சமயாச்சாரியர்கள் என்பவர்களும் அவர்களது பாடல்களும் நெறிகளுமே முக்கிய காரணம் என்பதைத் தூக்கு மேடையிலிருந்தும் சொல்லத் தயாராயிருக்கின்றோம்.

நிற்க, இக்கடவுள்களின் பொருட்டாக நம்நாட்டில் பூசைக்கும், அபிஷேகத்திற்கும், அவற்றின் கல்யாணம் முதலிய உற்சவத்திற்கும், பஜனை முதலிய காலக்ஷேபத்திற்கும், இக் கடவுள்களைப் பற்றிய சமயங்களுக்காக மடங்களுக்கும், மடாதிபதிகளுக்கும், மூர்த்தி ஸ்தலம், தீர்த்தஸ்தலம் முதலிய யாத்திரைகளுக்கும், இக்கடவுள்களின் அவதார மகிமைகளையும் திருவிளையாடல்களையும் இக்கடவுள்களைப்பற்றிப்பாடின பாட்டுக்களையும் அச்சடித்து விற்கும் புஸ்தகங்களை வாங்குவதற்கும், மற்றும் இவைகளுக்காக செலவாகும் பொருள்களிலும் நேரங்களிலும் நம் ஒரு நாட்டில் மாத்திரம் சுமார் இருபது கோடி ரூபாய்களுக்குக் குறைவில்லாமல் வருஷா வருஷம் பாழாகிக் கொண்டு வருகின்றது என்று சொல்லுவது மிகையாகாது.

இவ்விருபது கோடி ரூபாய்கள் இம்மாதிரியாக பாழ்க்கிறைக்காமல், மக்களின் கல்விக்கோ, அறிவு வளர்ச்சிக்கோ, விஞ்ஞான [சையன்ஸ்] வளர்ச்சிக்கோ, தொழில் வளர்ச்சிக்கோ செலவாக்கப்பட்டு வருமானால் நம் நாட்டில் மாத்திரம் வாரம் லக்ஷக்கணக்கான மக்களை நாட்டை விட்டு அன்னிய நாட்டிற்கு கூலிகளாக ஏற்றுமதி செய்ய முடியுமா? அன்றியும் தொழிலாளர்கள் கஷ்டங்கள் என்பது ஏற்படுமா? தீண்டக்கூடாத—நெருங்ககூடாத—பார்க்கக்கூடாத—மக்கள் என்போர்கள், கோடிக் கணக்காய் பூச்சி, புழு, மிருகங்களுக்கும் கேவலமாயிருந்து கொண்டிருக்க முடியுமா? 100க்கு மூன்று பேர்களாயிருக்கும் பார்ப்பனர்கள் மற்ற 100க்கு 97 பேர்களை சண்டாளர், மிலேச்சர், சூத்திரர், வேசிமக்கள், தாசிமக்கள், அடிமைப் பிறப்பு என்று சொல்லிக் கொண்டு அட்டை இரத்தத்தை உறிஞ்சுவது போல் உறிஞ்சிக்கொண்டும், நம்மையும் நம் நாட்டையும் அன்னியனுக்குக் காட்டிக் கொடுத்து நிரந்தர அடிமைகளாக இருக்கும்படி செய்து கொண்டும் இருக்க முடியுமா என்று கேட்கின்றோம். நமக்கு கல்வியில்லாததற்கு சர்க்கார் மீது குற்றம் சொல்லுவதில் கவலை கொள்ளுகின்றோமேயல்லாமல் நம் சாமியும், பூதமும், சமயமும் நம் செல்வத்தையும் அறிவையும் கொள்ளை கொண்டிருப்பதைப் பற்றியாராவது கவலை கொள்ளுகின்றோமா என்று கேட்கின்றோம்.

நிற்க "அன்பையோ, அருளையோ, ஒழுக்கத்தையோ, உபகாரத்தையோ மாறு பெயரால் கடவுள் என்று கூப்பிடுகின்றேன், அதனால் உனக்கு என்ன தடை?" என்று யா

ராவது சொல்ல வருவார்களானால், அதையும் (அதாவது அக்குணங்கள் என்று சொல்லப்பட்ட கடவுள் என்பதையும்) பின்பற்றும்படியான குணங்களாகவோ "கடவுள்"களாகவோ தான் இருக்கவேண்டும் என்று சொல்லுகின்றோமே ஒழிய வணங்கும்படியான கடவுளாக இருக்க நியாயம் இல்லை என்றே சொல்லுவோம்.

## மதம்.

இதுபோலவேதான் "மதம்என்பதும் சமயம் என்பதும் சமய நெறி என்பதும் மற்ற ஜீவன்களிடத்தில் மனிதன் நடந்துகொள்ள வேண்டிய நடையைப் பற்றிய கொள்கைகளைக்கொண்டது" என்பவர்களிடத்திலும் நமக்கு அவ்வளவாக தகரார் இல்லை. "அன்பே சிவம், சிவமே அன்பு" என்பதான சிவனிடத்தில் நமக்கு சண்டையில்லை. "அன்பு என்னும் குணம்தான் சிவம்; அந்த அன்பைக் கைக்கொண்டு ஜீவன்களிடத்தில் அன்பு செலுத்துவது தான் சைவம்" என்பதானால் நாமும் ஒரு சைவனாகவும் அதன் மூலம் நாமும் ஒரு சைவன் என்று சொல்லிக்கொள்ளவும் ஆசைப்படுகின்றோம். அதுபோலவே "ஜீவன்களிடத்தில் இரக்கம் காட்டுவது, ஜீவன்களுக்கு உதவி செய்வது ஆகிய குணங்கள் தான் விஷ்ணு; அக்குணங்களைக் கைக்கொண்டு ஒழுகுவதுதான் வைணவம்" என்பதான விஷ்ணுவிடத்திலும் வைணவனிடத்திலும் நமக்கு அவ்வளவாக தகராறில்லை என்று சொல்லுவதோடு நாமும் நம்மை ஒரு வைணவன் என்று சொல்லிக்கொள்ளும் நிலைமை ஏற்பட வேண்டும் என்றே ஆசைப் படுகின்றோம். நமக்கும் மற்றும் உள்ள மக்களுக்கும் அச் "சைவத் தன்மை"யும் "வைணவத்தன்மை"யும் ஏற்பட வேண்டும் என்றும் தவங் கிடக்கின்றோம்

அப்படிக் கில்லாமல், இன்னமாதிரி உருவம் கொண்ட அல்லது குணம் கொண்டது தான் கடவுள் என்றும், அதை வணங்குகிறவன்தான் சைவன் என்றும், அப்படி வணங்குகிறவன் இன்னமாதிரியான உடை பாவனை கொண்டவனாகவும் இன்னமாதிரி குறி இடுகிறவனாகவும் இருப்பதுதான் சைவம் என்றும், இன்ன பேருள்ள கடவுள்களைப் பற்றி பாடின, எழுதின ஆசாமிகளையும் புஸ்தகத்தையும் வணங்குவதும் மரியாதை செய்வதும் தான் சைவம் என்றும், மற்றபடி வேறு இன்ன உருவமோ பேரோ உள்ள "கடவுள்" என்பதை வணங்குகிறவர்களையும் வேறு குறி இடுகின்றவர்களையும் யாதொரு குறியும் இடாதவர்களையும் சைவரல்லாதவர் என்று சொல்வதுமான கொள்கைக்காரரிடமே நமக்குப் பெரிதும் தகரார் இருக்கின்றது என்று சொல்வதுடன் அக் கொள்கைகளையும் அச் சமயங்களையும் அக் கடவுள்களையும் சுட்டுப் பொசுக்கவேண்டும் என்றும் சொல்லுகின்றோம்.

அன்றியும பல சமயப் புரட்டர்கள் இம்மாதிரி விவகாரம் வரும்போது "நான் கடவுள் என்பதாக ஒரு தனி வஸ்துவோ ஒரு குணமோ இருப்பதாகச் சொல்லவில்லை" என்றும் "மலைதான் கடவுள், ஆறுதான் கடவுள், சமுத்திரம்தான் கடவுள், மரம்செடிதான் கடவுள், புஷ்பம்தான் கடவுள், அதன் மணம்தான் கடவுள், அழகுதான் கடவுள், பெண்தான் கடவுள், அதன் இன்பம்தான் கடவுள், இயற்கைதான் கடவுள், அத்தோற்றம்தான் கடவுள்" என்பதாக தமக்கே புரியாமல் உளறுவதும், மறுபடியும் "சிவன் தான் முழுமுதற்கடவுள், மற்றபடி விஷ்ணுவும் பிரம்மாவும் அவரது பரிவார தேவதைகள், சைவசமயம்தான் உண்மைச் சமயம் அதுதான் முக்தி அளிக்க வல்லது" என்பதும் அல்லது "விஷ்ணுதான் முழுமுதற் கடவுள், அதுதான் பரத்துவம் கொண்டது, மற்றவைகள் விஷ்ணுவின் பரிவார தேவதைகள்" என்பதும் "வைஷ்ணவ சமயம்தான் உண்மைச் சமயம், அதில்தான் பரத்திற்கு மார்க்கம் உண்டு" என்பதும, "அச்சிவனையோ விஷ்ணுவையோ முழுமுதற் கடவுளாகக் கொண்டு அக்கடவுள்களையும் அச்சமயங்களையும் பாடினவர்கள்தான் கடவுள் நெறியையும் நிலைமையையும் உணர்த்திய பெரியார்கள், சமயாச்சாரியர்கள்" என்பதுமாக மக்கள் முன் உளறிக் கொட்டி அவர்களது மனதை குழப்பச் சேற்றில் அழுத்துகின்றவர்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்களது புரட்டையும் பித்தலாட்டங்களையும் வெளியாக்கி மக்களை குழப்பச் சேற்றிலிருந்து விடுவிக்க வேண்டுமென்றுதான் சொல்லுகின்றோம்.

உலகத்தில் கடவுள் என்பது இன்னது என்பதாக மனதில் விவரப்படுத்திக் கொள்ளாமலே கடவுளைப் பற்றிய தர்க்கங்களும் தகராறுகளும் தினமும் நடைபெற்று வருகின்றது. இது இன்று நேற்று ஏற்பட்ட விவகாரம் அல்ல என்றுங் கூட சொல்லுவோம்.

எனவே மக்களின் பாரம்பரியமானதும் எங்கும் பரவி நகரும்படியானதுமான மடமைக்கு இதைவிட வேறு உதாரணம் கிடையாது என்பது நமது அபிப்பிராயம். ஏனெனில் இந்த விவகாரம் பாமர மக்களிடையில் மாத்திரம் நடைபெற்று வருகின்றது என்று சொல்லுவதற்கில்லை. இது பெரும்பாலும் படித்தவன், ஆராய்ச்சிக்காரன், பண்டிதன், பக்திமான் என்கின்ற கூட்டத்தாரிடையே தான் பெரிதும் (இவ்வறியாமை) இடம் பெற்று உரம்பெற்றிருக்கின்றது.

## கடவுள் அவசியமா.

நிற்க, சர்வ வல்லமையுள்ள என்று சொல்லப்படுவதான ஒரு "கடவுள்" இருக்கின்றார் என்பதை (அது இன்னது என்று புரியாவிட்டாலும்) விவகாரமில்லாமல் ஒப்புக் கொள்ளுவதாகவே வைத்துக் கொண்டாலும் மனிதனின் வாழ்க்கைக்கு அக்கடவுளின் சம்பந்தமோ வழிபாடோ அவசியமா? அல்லது மனிதனுக்கு சில குணங்களைக் கைக்கொண்டு அதன்படி ஒழுகும் தன்மை அவசியமா என்பதே நமது கேள்வி. அன்றியும் அப்படிப்பட்ட ஒரு "கடவுள்" தன்னை மக்கள் வழிபட வேண்டும் என்றாவது தனக்கு கோவில் கட்ட வேண்டுமென்றாவது பூசை, அபிஷேகம், தேர், திருவிழா, உற்சவம் முதலியவைகள் செய்ய வேண்டும் என்றாவது ஆசைப்படுமா? அல்லது மக்கள் சில குணங்களைக் கொண்டு மற்றஜீவன்களிடத்தில் இன்ன இன்ன விதமாய் நடந்து கொள்ள வேண்டும் என்பதை விரும்புமா? என்பதையோசித்துப்பார்த்தால் "கடவுள்" என்பது வாழ்க்கைக்கு வேண்டுமா வேண்டாமாஎன்பது விளங்காமல்போகாது. அன்றியும் அச்சர்வவல்லமையுள்ளசாமிகளை மக்களுக்கு அறிமுகப்படுத்த இவ்வளவு ஆசாமிகளும் சமயங்களும் வேண்டுமா என்றும் அந்தச் சாமிகளை இல்லை என்பவர்களுக்கு ருஜுப்படுத்த இவ்வளவு வக்கீல்கள் வேண்டுமா என்றும் கேட்கின்றோம்.

இதுபோலவே ஒவ்வொரு மதத்திலும் ஒவ்வொரு விதமாக உலகத்திற்கும் மக்களுக்கும் கடவுளுக்கும் சம்பந்தம் கற்பிக்கப்பட்டிருந்தாலும் புத்தமதம் என்பதில் மனிதன் நடந்து கொள்ள வேண்டிய ஒழுக்கங்களைத் தவிர வணக்கம் என்பதை அம்மதத் தலைவர் ஒரு சிறிதும்வலியுறுத்தியிருப்பதாகக் காணப்படவில்லை.

அன்றியும் அவர் கடவுளைப்பற்றியோ கடவுளை வணங்குவதைப் பற்றியோ கடவுள் நெறி உணர்த்திய பெரியார்களை மரியாதை செய்வதைப் பற்றியோ கவலைகொண்டு ஒரு கடுகளவு நேரமாவது செலவழித்திருப்பதாகவும் காணக் கிடக்கவில்லை. அன்றியும் அதைப்பற்றிய வார்த்தைகளையாவது அவர் எங்காவது உபயோகித்திருப்பதாக சொல்லுபவர்களும் காணக் கிடக்கவில்லை. அப்படிப்பட்ட ஒருவரை மதத் தலைவராகவும், அக்கொள்கையை, அம்மதத்தை, அச்சமயத்தை இன்றைய தினம் உலகத்திலுள்ள மொத்த ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்குக்குமேல் அதாவது 50 கோடி மக்களுக்குமேல் தம் மதமாகவும்ஏற்றுக்கொண்டிருப்பதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

அன்றியும் அப்படிப்பட்ட புத்தரை தங்கள் கடவுள் அவதாரமென்றும் தீர்க்கதரிசியென்றும் பகவான் என்றும் சொல்லிக்கொண்டிருக்கின்ற ஜனங்கள் இந்துமதம் என்பதிலே, சைவமதம்என்பதிலே, வைணவமதம்என்பதிலே பலகோடிக்கணக்கானவர்கள் இருப்பதோடு அதற்கு பல ஆதாரங்களும் வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இதை யாராவது மறுக்க முன் வருகின்றார்களா?

"மனிதனுக்கு ஏதாவது ஒரு மதமோ சமயமோ வேண்டியது அவசியம்" என்று யாராவது சொல்ல வருவார்களானால் புத்தமதம் என்பதும் உலகாயத மதம் என்பதும் சூன்ய மதம் என்பதும் இயற்கை மதம் என்பதும் மதங்கள் என்றுதானே சொல்லப்படுகின்றது. அப்படி இருக்கையில் அம்மதங்களில் ஏதாவது ஒன்றைக் கொண்டவர்கள் பலர் இருக்கலாம். எனவே அது எப்படி குற்றமுடையதாகும். எப்படி பல மதங்களுக்கும் சமயங்களுக்கும் தலைவரும் காலமும் இல்லாமல் இருக்கின்றதோ அதுபோலவே இம்மதங்களில சில வற்றிற்கும் காலமோ தலைவரோ இல்லாமலிருக்கலாம

ஆகவே, ஒரு மனிதன் இன்ன மதக்காரனாகவோ இன்ன சமயக்காரனாகவோ இன்ன கடவுளை வணங்குகிறவனாகவோ இருக்கவேண்டும் என்பதாக கட்டளையிடவும இன்ன மதக்காரனாக இருக்கக்கூடாது என்று நிர்ப்

பந்திக்கவும் யாருக்கு உரிமை உண்டு என்று கேட்கின்றோம்.

மனிதனுக்கு மதம் வேண்டும் என்பது அந்தந்த மனிதனின் தனி இஷ்டத்தைப் பொருத்ததா அல்லது மற்றொருவனுடைய நிர்ப்பந்தமா என்று கேட்கின்றோம்.

"துறவி"க்கு மதம் எது? "ஞானி"க்கு சமயம் எது? கடவுள் எது? "வேதாந்தி"க்கு மதம் எது? கடவுள் எது? சகலத்தையுந் துறந்தவர்தானே "துறவி"? சகலத்தையுஞ் சரி என்று எண்ணுகின்றவர்கள்தானே "ஞானி"?

"சகலமும் மித்தை, பொய், மாய்கை" என்று எண்ணுகின்றவன் தானே "வேதாந்தி" என்பவன்? இவைகளை உலகம் ஒப்புக்கொள்ளுகின்றதா இல்லையா? அங்ஙனமாயின் இம்மூவர்களும் "நாஸ்திகர்"களா என்று கேட்கின்றோம்.

உலகத்தில் 'துறவி' ஆவதற்கோ 'ஞானி' ஆவதற்கோ 'வேதாந்தி' ஆவதற்கோ எவனுக்கு உரிமை இல்லையென்று கேட்பதோடு எந்த புஸ்தகத்தைப் படித்துவிட்டு யாரிடம் உபதேசம் பெற்று அல்லது எந்த சமயத்தை ஏற்று எந்தக் கடவுளைத் தொழுது 'துறவி'யாகவோ 'வேதாந்தி'யாகவோ ஆகவேண்டும் என்கின்ற நிர்ப்பந்த முண்டா என்று கேட்கின்றோம்.

இவ்விஷயங்களை நாம் வலியுறுத்துவதால் பல நண்பர்களுக்கு சற்று மனக்கசப்பு ஏற்படலாம் என்பது நமக்குத் தெரியும். ஆனால் நம நாட்டின விடுதலை கண்டிப்பாய் இந்த விஷயங்கள் விளக்கமாவதில்தான் இருக்கின்றதேயொழிய வெள்ளைக்காரரிடமும் பார்ப்பனர்களிடமும் நேரில் முட்டிக்கொள்வதால் ஒரு பயனும் இல்லை என்றே சொல்லுவோம்.

வெள்ளைக்கார அரசாங்கமுறையும் பார்ப்பனர்களின் ஆதிக்கமும் நமது மானத்திற்கும் அடிமைத் தனத்திற்கும் சரித்திரத்திற்கும் ஆதாரமாயிருக்கின்றது என்பது சரியானாலும் அவ்வக்கிரமும் ஆட்சியும் ஆதிக்கமும் இந்தமதம், கடவுள், சமயம் என்பவைகளான மூடக்கொள்கைகளின் பேரில்தான் கட்டப்பட்டிருக்கின்றது என்பது நமது முடிவு. இம்மூடக்கொள்கைகளை வைத்துக்கொண்டு வெள்ளைக்காரர்களையும் பார்ப்பனர்களையும் பூண்டோடு அழிக்க நம்மால் முடிந்துவிட்டாலும் மறுபடியும் 'வெள்ளைக்காரர்களும்' 'பார்ப்பனர்களும்' வேறு எங்காவதிருந்தோ அல்லது நமக்குள்ளாகவே உற்பத்தியாகியோ நம்மை அடிமைகளாக்கி ஆதிக்கம் செலுத்திக்கொண்டுதான் வருவார்கள் என்பதை ஒவ்வொருவரும் கண்டிப்பாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும் என்பதாக தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

வெள்ளைக்கார அரசாங்கமோ அல்லது வேறு அன்னிய அரசாங்கமோ இல்லாமல் நம நாட்டார்கள் என்போர்கள் அரசாண்டு வந்த காலத்திலேயே நாம் அடிமைகளாக, தற்குறிகளாக, தாசி மக்களாக, தீண்டாதார்களாக இருந்து வந்திருக்கின்றோம் என்பதை தயவுசெய்து நயுங்கள் என்று வேண்டிக்கொள்ளுகின்றோம்.

நம்புவதற்கு ஏதாவது கஷ்டமாயிருந்தால் நம நாட்டு நம்மக்களால் 'சமூகம் டீஸ

## மதுரையில் சுயமரியாதைத் திருமண விழா.

### சமபந்தி போஜனம்,

நாளது ஜூன் மாதம் 25-ந் தேதியில் மதுரையம்பதியில் திருமலைராயர் படித்துறை மலையாளத்தான் செட்டியாரவர்கள் சத்திர ஹாலில் சிக்கல் தாசில்தாரான ஸ்ரீமான் தெய்வநாயக முதலியாரவர்களுக்கும் மதுரை சுயமரியாதை வீரர் திரு. பாலகுருசாமி அவர்கள் தங்கை சௌபாக்கியவதி ரத்தினகுருவம்மாளுக்கும் பார்ப்பனபுரோகிதத்தை விலக்கி பார்ப்பனரல்லாத பெரியாரைக் கொண்டு சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது. அவ்வமயம் சுயமரியாதை வீரர்களாகிய ஸ்ரீமான்கள் பத்மநாப நாயுடு தாலுகா ஆபீஸ் கிளார்க் மேலூர் ராமய்யா பிள்ளை அவர்கள் ஐக்கிய சங்க இன்ஸ் பெக்டர் முதலியவர்கள் வந்திருந்தார்கள். பின்பு மதியானம் சமபந்தி போஜனம் ஒன்று நடைபெற்றது. இரவில் ஊர்வலம் வெகு சிறப்பாக நடைபெற்றது. மணமக்கள் நீடூழி வாழ்க,

ஒரு நிருபர்.

## தென்காசியில் சுயமரியாதை சங்க ஸ்தாபனம்.

26-6-28 தென்காசி கோட்டை வாசல் முன்பு மாலை 6 மணிக்கு ஒரு கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு சுமார் 500 ஜனங்கள் வந்திருந்தனர். அனேக வக்கீல்களும் கூட்டத்திற்கு வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

கூட்டத்தில் சுயமரியாதைப் பிரசாரகர் ஸ்ரீமான் லெட்சுமணபிள்ளை அவர்கள் பேசினார்கள். பின்னர் சுயமரியாதை சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது.

எஸ். எ. வேலாயுதம்

---

வரி' பேராலும் 'பத்மநாபசாமி' பேராலும் 'கிருஷ்ணசாமி' பேராலும் ஆளப்படும் சமஸ்தானங்களையும் திருவாங்கூரையும் கொச்சியையும் தயவுசெய்து சற்று திரும்பிப்பாருங்கள் என்று வேண்டிக்கொள்ளுகின்றோம்.

ஆட்சிமுறைக் கொடுமையும், பார்ப்பன ஆதிக்கமும், வெள்ளைக்கார அன்னிய அரசாங்கத்தைவிட உள் நாட்டு மக்களால் ஆளப்படும் சுயராஜ்ய அரசாங்கத்தில் அதிகமா? கொஞ்சமா? என்பதை கவனித்தால் வெள்ளைக்காரரும் பார்ப்பனர்களும் தாங்களாகவே தங்கள் பலத்தால் அக்கிரமங்களை செய்கின்றார்களா? அல்லது இந்த மதமும் கடவுளும் மதநெறியும் இவ்வித அக்கிரமங்கள் செய்ய இடங்கொடுக்கின்றதா என்பது சுலபத்தில் விளங்காமல் போகாது என்றே எண்ணுகின்றோம்.

எனவே நம் நாட்டிற்கு இப்போது அவசியமாக வேண்டியது என்னவென்றால், மூடநம்பிக்கை ஒழிய வேண்டும்; அறிவுக்கு சுதந்திரமும் விடுதலையும் ஏற்பட்டு அது வளர்ச்சி பெற வேண்டும்; சுயமரியாதை உணர்ச்சி ஏற்படவேண்டும். இம்மூன்றும் ஏற்பட வேண்டுமானால் மதமும், சாமியும், சமயாச்சாரியார்களும் சந்திக்கு வந்தே தீரவேண்டுமே யல்லாமல் இதற்கு வேறு பரிகாரமோ ராஜியோ இல்லை யென்றே சொல்லி இதை முடிக்கின்றோம்.

---

## முசிரி தாலுகா சுயமரியாதைப் பெரியார்களுக்கோர் வேண்டுகோள்.

பார்ப்பன ஆதிக்கமிருந்த லால்குடி தாலுகா தன் கடமையை செய்து என் போன்ற பற்பல இளைஞர்களுக்கு சுயமரியாதை உணர்ச்சியை தூண்டிவிட்டது. பார்ப்பன ஆதிக்கம் அதிகமில்லாத நம் முசிரி தாலுகாவில் முசிரி, துறையூர், தாத்தையங்கார்பேட்டை, தொட்டியம், காட்டுப்புத்தூர், அய்யம்பாளையம் முதலிய முக்கிய கிராமங்களில் பார்ப்பனரல்லாத நம் தமிழ் பிரபுதார்களும் ஜமீன்தார்களும் மிட்டாதார்களும் வர்த்தகர்களும் நிறைந்த நமது தாலுகாவில் சுயமரியாதை மகாநாட்டை நடத்தி சுயமரியாதை பெறாமல் இருப்பது நம் போன்றவர்களுக்கழகாமோ? சுயமரியாதை யுணர்ச்சியுள்ள ஆண் சிங்கங்களாக இருக்கின்றீர்கள் என்ற உணர்ச்சி உங்களுக்கிருக்குமாயின் பெரியோர்களே! நம் தாலுகா மகாநாட்டை அடுத்த ஜூலை மாதத்தில் கூட்டுவதற்கு எனது வேண்டுகோளை பொருட்படுத்தி கூடிய சீக்கிரத்தில் நம் தாலுகாவிலுள்ள முக்கியமான ஊரில் பொதுக்கூட்டமொன்று போட்டு மகாநாடு கூட்ட வேண்டியதற்கு வேண்டிய ஏற்பாடுகளைப்பற்றி தீர்மானிக்க வேண்டுமாய் நம் தாலுகா சுயமரியாதை யுணர்ச்சியுள்ள பெரியோர்களிடம் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பிராமண ஆதிக்கம் நிறைந்ததும் சமீபத்தில் சுமார் ஐந்து வருடங்களுக்கு முன் தாலுகாவென்று பெயரிடப் பட்டதுமான லால்குடி இரண்டு சுயமரியாதை தியாகிகளை கொண்டு தனது காரியத்தை முடித்து விட்டது என்றால், நீண்ட நாளாக தாலுகாவாக உள்ளதும் அதிக செல்வாக்குள்ளதுமான முசிரி தாலுகாவில் நாம் இருந்து கொண்டு மனதில் மாத்திரம் ஆகாயக்கோட்டை கட்டிக் கொண்டு சுயமரியாதை யற்றவர்களாய் இருப்போமானால் அடுத்த தாலுகாவிலுள்ளவர்களும் நமது தலைவர்களும் என்ன நினைப்பார்களென்பதை அன்பர்களே யோசித்துப் பாருங்கள்.

அன்பர்களே இடம், பொருள், ஏவல், மூன்றும் நம் மகாநாட்டிற்கு தேவையானதால் எங்கள் ஊரிலுள்ள சுயமரியாதை தொண்டர்களாகிய நாங்கள் எங்கள் சக்திக்கு ஏற்ற துணைபுரிய தயாராய் இருக்கிறோம். எனெனில் ஊரிலுள்ள பெரியோர்கள் நமது முசிரி தாலுகா பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை முதல் மகாநாட்டை நடத்தி நமது அடிமைப் புத்தியை ஒழித்து வெற்றியடைவோமாக.

எஸ். ராமசாமி,
சுயமரியாதைத் தொண்டன்,
திருச்சி ஜில்லா துறையூர்.

---

அறிவு என்று அடிமைப்பட்டதோ
அன்றே உடலும்
அடிமைப்பட்டு விடுகிறது.

"குடி அரசு" சந்தாதாரர்களுக்கு

## ஓர் அறிக்கை.

சந்தாதாரர்கள் எழுதும் ஆவலாதிகளில் சந்தா நெம்பரைக் குறித்து எழுதக் கோருகிறோம். சிலர் 2041 என்னும் பத்திரிகையின் பதிவு [ரிஜிஸ்டர்] நம்பரை சந்தா நெம்பர் என்று நினைத்து அந்நெம்பரைக் குறித்து எழுதுகிறார்கள். சந்தா நெம்பர் என்பது சந்தாதாரரின் விலாசத்துடன் காணப்படும் நெம்பரேயாதலால் அந்நெம்பரைக் குறித்து எழுதப்படாத எவ்வித ஆவலாதியும் கவனிக்கப்படமாட்டாது.

சந்தாதாரர்கள் தங்கள் சந்தா காலாவதியடைவதற்கு முன் அடுத்த வருஷத்திற்கு பத்திரிகை அனுப்பவேண்டாமென்று எழுதாதவரை அடுத்த வருஷத்திற்கும் பத்திரிகை அனுப்பும்படி கேட்டுக் கொண்டதாகவே வைத்துக்கொண்டு பத்திரிகை வி. பி. யில் அனுப்பப்படும். ஆதலால் சந்தா நேயர்களின் சம்மதத்தின் பேரிலேயே அனுப்பப்பட்டதாக ஏற்பட்ட வி. பி. யை கௌரவிக்க வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர்.

---

## சாஸ்திரமும் சமூகமும்.

பண்டித ஜவாரிலால் நேரு சொல்தாவது:

மூடப்பழக்க வழக்கங்களால் நமது சமூகம் நீண்ட காலமாகவே பல துன்பங்களுக்கு ஆளாகி வருகிறது. அக்காலத்தில் சமூகத்திற்கு அதிக வலுவைத் தந்துவந்தது எதுவோ, அதே இக்காலத்தில் சமூகம் ஒரு அடியும் முன்வராதபடி தடுத்து வரும் பெரும் முட்டையாகவும் இருந்து வருகிறது. உண்மையை ஆராய்ந்தால் சமூகத்தினிடையேயுள்ள பல மூடப்பழக்க வழக்கங்களுக்கு சாஸ்திரத்தில் எத்தகைய ஆதாரமும் கிடையாது. எனினும் சாஸ்திரங்களின் பெயரால் பல தீமைகளை இழைத்து வருவதோடு நமது சகோதரர்களில் சிலரையும் தீண்டாதவர்களென கூறி அடக்கிவைத்திருக்கிறோம். நம்மிடமுள்ள பல பழக்க வழக்கங்கள் தீயவையென நாம் உணர்ந்தும் விடாப்பிடியாய் பிடித்துக் கொண்டுதானிருக்கின்றோம். நமது தேச மக்களில் ஒரு பகுதியாரை சாஸ்திரத்தின் பேரால் அடக்கி வைத்திருப்பதோடு அவர்களுடைய முன்னேற்றத்தையும் தடுத்துவருகிறோம். அதே சாஸ்திர ஆதாரங்களைக் காட்டி மக்கள் எச்சாதியில் இருக்கின்றனரோ அச்சாதியிலேயேயிருந்து கொண்டு அதற்கேற்றவேலைகளையும் செய்துகொண்டு வரவேண்டுமெனக் கட்டாயப்படுத்தி வருகிறோம். கடவுள் பெயரால் நாம் ஆதாரங்களைக்காட்டுவதோடு அதே ஆதாரத்தையே மதம் என்றும் போற்றுகிறோம். இந்த மனோபாவத்தோடு ஈடுபடும் மனித அறிவு என்றும் பிரகாசிக்க இயலாது. அறிவு என்று அடிமைப்பட்டதோ அன்றே உடலும் அடிமைப்பட்டு விடுகிறது.

"தொழிலாளி"

---


# நாடார் மகாஜன சங்கம் 12-வது மகாநாடு, அருப்புக்கோட்டை.

**1928-ஹு ஜூலை-மீ 4, 5, 6 தேதிகளுக்கு விபவ-ஹு ஆனி-மீ 21, 22, 23-உகளில் நடைபெறும்.**

குமாரமங்கலம் ஜமீன்தாரும், சென்னை கவர்ன்மெண்ட் முதல் மந்திரியுமான கனம் டாக்டர் பி. சுப்பராயன் M. A. B. C. L. L. L. D. அவர்கள் மகாநாட்டைத் திறந்துவைப்பார்கள்.

பொறையார் வி. கனகசபை நாடார், பிரசிடெண்ட்.
ப. உ. ஆ சிதம்பர நாடார், உபசாலைக்கமிட்டி சேர்மன்.
சு. ஆ. முத்து நாடார், ஜனரல் செக்ரட்டரி.

## நாடார் தொண்டர்படை முதலாவது மகாநாடு:

6—7—28உயில் அருப்புக் கோட்டையில் நடைபெறும்

**திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள்** அக்கிராசனம் வகிப்பார்கள்.

எஸ். கே. ராமசாமி நாடார்,
சேனாதிபதி.


## ஒரு பார்ப்பனப் புரோகிதன் கல்யாண சந்தடியில் ஒரு ரூபாயைத் திருடினான்;

மதுரையில் ஜூன்-மீ 23உ-பன்று பார்ப்பனரல்லாத ஒரு பெரியார் வீட்டில் ஒரு பார்ப்பனப் புரோகிதனை வைத்து கலியாணம் ஒன்று நடந்தது. அப்பொழுது அப்பார்ப்பனப் புரோகிதன் கலியாண மாப்பிள்ளையின் மாமனாரை "மாப்பிள்ளைக்கு ஒரு ரூபாய் கொடுக்க வேண்டும்" என்றும் "அதனால் தான் மாப்பிள்ளை செல்வவந்தராவார்" என்றும் சொன்னார். உடனே மாமனார் ஒரு ரூபாயை எடுத்து புரோகிதனின் பக்கத்தில் வைத்தார். உடனே அப்பார்ப்பனன் கலியாண சந்தடியில் ஒருவருக்கும் தெரியாதபடி தன் மடியிலிருந்து இரண்டணாவை எடுத்து அந்த ஒரு ரூபாய் இருந்த இடத்தில் வைத்து விட்டான். பின்பு அந்த ரூபாயை எடுத்துத் தன் மடியில் வைத்துக் கொண்டான். இதை சிலர் பார்த்தும் பார்ப்பனனை எப்படிக் கேட்பதென்று நினைத்து சடங்குகள் முடியும்வரை சும்மா இருந்து விட்டார்கள். பின்னர் அது வெளியாக்கப்பட்டது. என்னே இப் பார்ப்பனின் அக்கிரமம்! இன்னும் நம மக்களுக்கு பார்ப்பன அயோக்கியத்தனம் தெரியவில்லையே என்பதுபற்றி வருந்துகிறோம். இனிமேலாவது அவர்களின் அயோக்கியத்தனமும் அக்கிரமும் தெரிந்து அவர்களை அறவே ஒழித்து நம் பார்ப்பனரல்லாத பெரியாரை வைத்து காரியங்களை நடத்தும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

சுயமரியாதை வாழ்க. பார்ப்பனீயம் வீழ்க!

கண்ணிற்கண்டேன்.

---


## அறிவிப்பு.

எமது சோதிடாலயத்திற்கு அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் வந்து கொண்டிருப்பதால் அன்னோர்களுக்கு தனித்தனியாக வந்தனம் கூற முடியாமையால் இப்பத்திரிகை வாயிலாக எமது அன்பார்ந்தநன்றியறிதலை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

## எதிர்கால சோதிடம்.

நீங்கள் பிறந்த நாழிகை அல்லது கடிதம் எழுதும் நேரத்தையாவது குறித்தனுப்பினால் உங்கள் எதிர்கால ஆயுள், தனம், சகோதரம், மாதர், பிதுர், ஸந்தானம், சத்ரு, ருணம், களத்திரம், களத்திர ரூபம், பாக்கியம், ஜீவனம், தொழில், லாபம், விரயம் ஆக இத்யாதி விஷயங்கள் பூராவும் தெரிவிக்க ரூ. 2. ஒரு வருஷத்திற்கு மாதவாரி நடக்கும் பலன் எழுத ரூ 2 பலன் சரியில்லாவிடில் பணம் வாபீஸ் செய்யப்படும்.

அருட்பிரகாசர் சோதிடாலயம்
வைத்திக்குப்பம், புதுவை. (பிரஞ்சிந்தியா).


---

# சுயமரியாதை பெற்றால் சுயராஜ்யம் பெறலாம்.

## காஞ்சீபுரம்

## செங்குந்த மகாஜனக் கூட்டம்.

1928-௵ ஜூன்௴ 24௳ மாலை 7 மணிக்கு காஞ்சீபுரம் பிள்ளையார் பாளையம் ஒதியடி மேடை திருஞானசம்பந்த சுவாமிகள் சந்நிதியில் காஞ்சீபுரத்திலுள்ள செங்குந்த மகாஜனங்களுடைய கூட்டம் ஒன்று கூட்டப்பெற்றது. இக்கூட்டத்தில் காஞ்சீபுரம் மகாநாடு செங்குந்த குலத்தலைவரும், மாஜி முனிசிபல் சேர்மெனும், தேவஸ்தான கமிட்டித் தலைவரும் ஆகிய ஸ்ரீமான் ம. த. சாமிநாத முதலியாரவர்கள், முனிசிபல் கவுன்சிலர் ஸ்ரீ வை. விநைதீர்த்தான் முதலியார் தென்னிந்திய செங்குந்த மகாஜனசங்கப்பிரசாரகர் ஸ்ரீ பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்களும், காஞ்சி செங்குந்த வாலிபர்சங்க காரியதரிசி ஸ்ரீமான் சி. அருணாசல முதலியார் அவர்களும் வந்திருந்தார்கள். இக்கூட்டம் பெருந்திரளாகவும், பொலிவாகவும் இருந்தது. இக்கூட்டத்திற்குத் தலைவராக ஸ்ரீமான் அ. மு. நாகலிங்க முதலியாரவர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள். கடவுள் வாழ்த்து செய்யப்பெற்றபின் ஸ்ரீமான் க. வச்சிரவேல் முதலியாரவர்கள் "செங்குந்தர் தற்கால நிலை" என்பதுபற்றி ஒரு உபந்யாசம் செய்தார்கள். பின் செங்குந்த சமூக சம்பந்தமான பல தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின. வந்தனோபசாரம் கூறப்பெற்று இரவு 9 மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது.

அ. மு. நாகலிங்க முதலியார்,
தலைவர்.

---

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

துவாக உலகத்தில் எக்காலத்திலும் ஒரே விதமான ஒழுக்கம் நடைபெறுவதில்லை. காலத்திற்குத் தகுந்தவாறும், மக்கள் அறிவு வளர்ச்சிக்கு ஏற்றவாறும், நாகரிக முதிர்ச்சிக்கு இசைந்தவாறும் அடிக்கடி உலக ஒழுக்கம் மாறுபடுவது இயற்கை. அவ்வாறு மாறுபடுங் காலத்தில் பழயனவாகிய ஒழுக்கங்கள் பல அழிந்தொழிதலும், புதியனவாகிய ஒழுக்கங்கள் பல உண்டாதலுங் கூடும். அப்பொழுது அறிவுடையவர் பழையனவற்றைத் தகர்த்தெறிவதற்குச் சிறிதும் அஞ்சாது தகர்க்க வேண்டும். புதிய ஒழுக்கங்களையும் பின்னடையாமல் மேற்கொள்ள வேண்டும். அதுவே அறிவுடைமையாகும். அதுவே கற்றவர்களுக்கு அழகாகும். இதனை திருவள்ளுவர் (10) "பல துறைகளைப் பற்றிக் கூறும் நூல்களைப் பயின்றிருந்தாராயினும், உலகத்தோடு பொருந்த நடந்து கொள்ளுவதை அறியாதவர்கள் அறிவில்லாதவராவார்" என்று கூறுவதனால் அறியலாம்.

ஆகவே இக்கட்டுரையால், மனிதப்பிறப்பின் இயற்கையே நன்மையான காரியங்களைச் செய்து நன்மை பெறுவதென்பதும், அதுவே ஒழுக்கமென்பதும், எல்லா மனிதர்களும் தமது பிறப்புக்குரிய நன்மை செய்வதாகிய நல்லொழுக்கத்தை மேற்கொள்ளவேண்டுமென்பதும், அவ்வொழுக்கமும் உலகத்தோடியைந்த வொழுக்கமாக இருக்கவேண்டுமென்பதுங் கூறப்பட்டது.

## கோலாலம்பூர்

# "திராவிட நேசன்" முன்னறிக்கை.

தமிழர்களின் முன்னேற்றத்திற்காக உழைக்க ஓர் தமிழ் பத்திரிகையை கூட்டுக் கம்பெனியாக வைத்து நடத்த வேண்டுமென பலர் விரும்பியதற்கிணங்க சில பிரமுகர்கள் கூடி நியமித்த காரியநிர்வாக சபையாரால் கீழ்க்கண்ட நோக்கங்கள் வெளியிடப்படுகின்றன. பிராஸ்பெக்டஸ் எழுதி ரிஜிஸ்டர் செய்வதற்கு ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. பிராஸ்பெக்டஸ், அப்ளிகேசன் வெளியிட்டதின்பிறகுதான் பணம் வசூல்செய்யப்படும்.

பெயர்:—

"திராவிட நேசன்" அச்சுயந்திரசாலை

ஸ்தாபனம்:—கோலாலம்பூர்

மூலதனம்:—

$60,000 (பங்கு ஒன்றுக்கு வெள்ளி ஒன்றாக 60,000 பங்குகள்)

உத்தேசவிபரம்:—

| | |
|---|---|
| அச்சுயந்திரம், எழுத்து முதலியவைகள் | $20,000.00 |
| காகிதம், மை, ஸ்டேஷனரி | 5.000.00 |
| மின்சாரக் கருவிகள் | 2,000.00 |
| மேஜை, நாற்காலி, தளவாட முதலிய சாமான்கள் | 2,000.00 |
| கட்டிடம் நிலம் உட்பட | 25.000.00 |
| சிப்பந்திகளின் சம்பளத்திற்கும், அவசரசிலவிற்கும்பாங்கில் இருப்பு | 6,000.00 |
| மொத்தம் | $60,000.00 |

முயற்சிகள்

1. பத்திரிகைகள் நடத்துவது.
2. வேண்டியவர்களுக்கு புஸ்தகங்கள் சில்லரை அச்சுவேலைகள் செய்வது;
3. புஸ்தகங்கள், ஸ்டேஷனரி சாமான்கள் விற்பது.

பத்திரிகை—பெயர் "திராவிட நேசன்"
[தமிழ் வாரப பத்திரிகை]

### நோக்கமும் கோள்கையும்.

1 சமூகசீர்திருத்தம்:—சமூக முன்னேற்றத்திற்கு தடையாயுள்ள வழக்கங்களை சீர்திருத்தல், பால்ய விவாகத்தைத் தடுத்து விதவா விவாகத்தை ஆதரித்தல், சுகாதார முறைகளை வாழ்க்கையிலும், உடையிலும், உணவிலும், பழக்கமாகக் கொண்டுவர போதித்தல், சமூக சீர்திருத்தத்திற்கு அவசியமான விஷயங்களை அப்போதைக்கப்போது எடுத்துக்காட்டல்

2 சுயமரியாதையை ஆதரித்தல்:—ஒடுக்கப்பட்டவர்களை மரியாதையுடன் நடத்தி அவர்களின் முன்னேற்றத்திற்காக உழைத்தல்.

நமக்குமேல், உயர்ந்த ஜாதியோ அல்லது தாழ்ந்த ஜாதியோ உண்டென்பதை ஆதரியாதிருத்தல்.

பொது ஸ்தாபனங்களில் சமூகத்திற்கு உண்டாகும் கஷ்டங்களை நீக்குவதற்கு தகுந்த முறைகளில் முயற்சித்து உதவி புரிதல்.

3 கல்வி:—பெண்கல்வி அதிக அவசியமென வற்புறுத்துதல், கைத்தொழில் அபிவிர்த்தி, தமிழ், ஆங்கிலமாகிய பாஷைகளில் தேர்ச்சி அடைய உழைத்தல்.

4. பொதுநன்மை:—கூட்டுறவு சங்கங்களையும், கூட்டுறவு வியாபாரங்களையும், ஆதரித்தல்.

5. விளம்பரம்:—மதுபான விளம்பரங்களையும், சமூக முன்னேற்றத்தையும் பாதிக்கக் கூடிய விளம்பரங்களைத் தவிர்த்த மற்றய விளம்பரங்களைமாத்திரம் பிரசுரித்தல்.

6. பங்குகள் விற்கும் விதம்—பங்கு ஒன்றுக்கு ஒரு வெள்ளி வீதமிருப்பினும் பத்து பங்குகளுக்குக் குறைய கொடுக்கப்படமாட்டாது. பங்குத் தொகைகள் மூன்று தவணைகளில் வசூலிக்கப்படும். பங்குகள் பார்ப்பனரல்லாதாருக்கு மட்டும் தான் கொடுக்கப்படும்.

குறிப்பு—இம்முன்னறிக்கையைக் காணுறும் கனவான்கள் தங்கள், தங்கள் நண்பர்களுக்கும், பொது ஜனங்களுக்கும் இவ்வறிக்கையிலுள்ள நோக்கங்களை தெரிவிப்பதோடு அனைவரிடமும் பங்குகள் எடுக்கும்படி முயற்சிகள் செய்து பங்குகள் எடுப்பவர்களின் விலாசங்களையும், அவரவர்கள் எடுக்க விரும்பும் பங்குகளின் எண்ணிக்கைகளையும் 'திருவாளர் ஆர். வி. சுப்பையா பிள்ளை, 80 அம்பேங் வீதி, கோலாலம்பூர்' என்ற விலாசத்துக்கு தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

### ஆதரிப்போர்கள்.

திருவாளர்கள்:—ஆர் டி. இராமசாமிபிள்ளை, ஜே. பி. அம்பேங் வீதி, கோலாலம்பூர்-ஆர். வி. சுப்பையா பிள்ளை, ரிட்டயர்டு எப். எம். எஸ். கவர்மெண்டு சர்வடர், செண்டல், கே. எல்- டி. கருணைபா செட்டியார், கவர்மெண்டு பென்ஷனர், கே. எல்- பி. சின்னத்தம்பி, மாடேன் சப்ளை கம்பெனி, செண்டல், கே. எல்- என். வி. வில்வலிங்கம் பிள்ளை, கவர்மெண்டு பென்ஷினர், கே. எல். எம். பி. எல். பழனியப்ப செட்டியார், மார்ச்சண்ட், கோலாலம்பூர்- டாக்டர். லெக்ஷுமைய நாயுடு, சிட்டி டிஸ்பென்சரி, எம். எஸ். வடிவேல் பிள்ளை, மார்சண்ட், கே. எல்- சி. கோவிந்தசாமி நாயுடு, பிளேண்டர், கேம்பாங்- எஸ். கே. புகார்தீன், கோராப் மெஸ்ஷேர்ஸ் எம். இ. என். இ. புர்காண்டீன் பிரதர்ஸ், கே. எல்- எம். இராமலிங்கம், கோராப் எம் ராமலிங்கம் கம்பெனி, ஜூவல்லேர்ஸ் கே. எல். பக்கீர்மெய்தீன் கோராப் இஸ்மெயில் கனி ராவுத்தர், அண்டு கம்பெனி, கே. எல்- பி. ஆர். எம். என. நாராயணஞ் செட்டியார், பேங்கர், ஏஜண்டு, ஆப். எஸ். பி. எஸ். ஆர். எம். 90. அம்பேங் வீதி, கே. எல்- வி. எ. பி. எஸ். பழனியப்ப செட்டியார், பேங்கர், 88, அம்பேங் வீதி, கே. எல்- ஜி. சங்கரபாணி நாயுடு, மர்ச்சண்ட், 105, மார்கட் வீதி, சிங்கப்பூர்- எஸ். டி. இராஜன், மர்ச்சண்ட், கிளேங்- எஸ் பி ஆறுமுகம்; பேங்கர், மூஆர்- வி பி இராஜகோபால் நாயுடு, பேங்கர், கோலா கேங்சார்- வி. பி. கோவிந்தசாமி பிள்ளை, கன்ட்ரேக்டர் ஈபோ- எம். பி. சோமசுந்தரம் பிள்ளை, பேங்கர், டெய்பிங்.

13—6—28 கோலாலம்பூர்.

குறிப்பு:- ஷை "திராவிட நேசன்" பத்திரிகை சீக்கிரம் வெளிவரும்படி தமிழர்கள் வேண்டிய உதவிசெய்ய வேண்டுமென்று விரும்புகின்றோம். ப. ர.

## ஸ்ரீலஸ்ரீ கைவல்ய சுவாமிகள்.

கடவுளினின் திருவருள்பெற்ற சுவாமிகளே! இருள் சூழ்ந்த உலகின்கண் பரிதி பிறந்து கிரணம் ஆன்மகோடிகட்கு ஆனந்த மூட்டுவது போன்று, மகருஷி அவதரித்தாற்போன்று தாங்கள் ஜெனித்துப் பல்லாயிரம் கோடி பொது நன்மைகள் புரிந்திருப்பீர்கள். இஃதில் ஒன்றாகிய இந்து தர்ம விவாகம் விஷயங்களைக்கொண்டு அஃதின் உண்மையையும், இரகஸ்யங்களையும், இக்காலத்தின் சூழ்ச்சிகளையும், ஏமாற்றங்களையும், இதனால்நேரும் பல துன்பங்களையும், உள்ளங்கை நெல்லிக் கனிபோல யாவருக்கும் புலனாகும் வண்ணம் "குடி அரசில்" வெள்ளிடையாக விளம்பரம் செய்து வருகிறதைக் கண்ணுற, சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்ததுபோன்று மிக்க மதுரமாக இருப்பதுடன், அந்தகனுக்கு நேத்திரம் அளித்ததுபோன்று இருக்கிறது. நெருப்புப் பற்றிய சேத்தோன் அண்மையில் ஓர் தடாகம் கண்ணுற்றுவிட்டால், எங்ஙனம் பேரானந்தங் கொள்ளுவானோ அங்ஙனமே திருமிகு தங்கள் வியாசங்களை "குடி அரசில்" கண்டவுடன் மும்மலம் அற்ற சுவாமிகாள்! ஆனந்தமும் ஆர்வமும் உண்டாகிறது. தாங்கள் கருணை கூர்ந்து வரையும் வியாசத்தில் மாறுபட்டலையா மார்க்கம் நன்கு கூறியருள்கிறீர்கள். இத்தியாதி விடயங்களை நன்கு ஆராய்ந்துணர்ந்து, எட்டுணையும் புரையற வளர்ந்துவரும் தங்களிருசெய்ய மலரடிகட் கடியேன் சென்னிவைப்பேன். வீரய்ய நாயக்கர்,
யாழ்ப்பாணம்.

## பார்ப்பனியமொழிந்த திருமணம்

அருப்புக்கோட்டை தாலூக்கா செட்டி குறிச்சி டிவிஷன் அருணசலபுரத்தில் சுப்பா ரெட்டியாரவர்கள் குமாரன் குருசாமி ரெட்டியாருக்கும் சோகிலுபட்டி என்கிற திருக்குமரிபுரம், சுப்பா ரெட்டியார் மகள் சீதையம்மாளுக்கும் விபவ-ஆனி-மீ 7-உ புதன்கிழமையன்று பார்ப்பன புரோகிதமும் அர்த்தமற்ற சடங்குகளும் இன்றி சுயமரியாதையாக திருமணம் நடத்தப்பட்டது. அத்திருமணத்துக்கு சக்கில நத்தம் முதலாளி ஸ்ரீமான் துரைசாமி ரெட்டியாரவர்களும், அரங்கசாமி அவர்களும், ஓ. சங்கரரெட்டியாரவர்களும், ஆவில்சூரம்பட்டி முதலாளி ஸ்ரீமான் கோபால்சாமி ரெட்டியாரவர்களும், வடுகக்கோட்டை முதலாளி வி. குருசாமி நாயக்கரவர்களும், அருப்புக்கோட்டை வாழ வந்தம்மன் கோவில் அர்ச்சகர் ஸ்ரீமான் கணபதி பண்டாரம் அவர்களும், சன்மார்க்க சங்க காரியதரிசி வா, து. கைலாசம் பிள்ளை அவர்களும், சுயமரியாதை மாணவர்கள் முதலியோர்களும் விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. திருமண முடிவில் மாணவர் சுயமரியாதை தேசியப் பாட்டுகள் பாடியது ஜனங்களை சுயமரியாதைக் கவர்ச்சியில் ஈடுபடும்படி செய்தது. வா. து. கைலாசம்.

## பார்ப்பனியம் ஒழிந்த திதி

பெரியகுளம் தாலூக்கா நாகலாபுரத்திலிருக்கும் ஸ்ரீமான் த. நா. கிருஷ்ணசாமி நாயக்கரவர்கள் தமது தந்தைக்கு சுமார் 10-வருஷமாய் பார்ப்பனரைக்கொண்டு நடத்திய கிரார்த்தச் சடங்கை சுயமரியாதையை முன்னிட்டு சென்ற மாதம் இருபதாம் நாள் புதனன்று இவ் வருஷ சிரார்த்தத்தை பார்ப்பனப்புரோகிதரை ஒழித்து தமது நண்பர்களுடனும் பெரியோர்களுடனும்சிறப்பாக நடத்தி இனிது நிறைவேற்றினர்.

ஓர் நிருபர்.

## காலரா.

கொடியதும், மிகப் பயங்கரமானதுமான இந்த நோய் உங்கள் ஜில்லாவிலாவது, தாலூக்காவிலாவது, கிராமத்திலாவது பரவுமுன்—நீங்கள் முன் ஜாக்கிரதையாயிருங்கள்! காலராவைத் தடுப்பதற்காயினும் சரி, அல்லது குணப்படுத்துவதற்காயினும் சரி, வைத்ய ரத்ன கோபாலாச்சார்லு அவர்களின்

### கற்பூராதிரிஷ்டம்
### &
### விஷூசிசஞ்சீவினிவடி

என்ற மருந்துகளுக்கு இணையானது ஒன்றுமில்லை. ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டியது அவசியம்.

**விலை செட் 1-க்கு ரூ. 1-2-0.**

**ஆயுர்வேதாஸ்ரமம்,**
**151, கோவிந்தப்பநாய்க்கன் வீதி,**
**தபால் பெட்டி 287, சென்னை.**

## வருணஜெபப்புரட்டு

நச்சாந்து பட்டியில் சிவாலய பிரதிஷ்டை சென்ற மாதம் 10 ஆம் தேதி மிகச்சிறப்பாக நடைபெற்றது அதற்கேற்பட்ட தண்ணீர் கஷ்டத்தை நிவர்த்தி செய்ய 10 தினம் முன்னதாகவே ஏராளமான பணச் செலவில் பல பிராமணர்களைக் கொண்டு வருண ஜெபம் நடத்தியும் மழை யென்பதே கிடைபாது. அங்கே பிரபுக்கள் சுமார் 6, 7 மயிலுக்கப்புறமிருந்து தண்ணீர் கொண்டுவந்து உதவினார்கள். அன்பர்களே வருண ஜபம் வைத்தால்மழை வந்து விடுமெனச் சொல்லும் போலிப்பிராமணர்கள் சொல்லை நம்பி அவர்களுக்கு பொருளை போஜனமோ அளித்து மோசம் போகாதீர்கள். ஒரு நிருபர்.

## அசோகி.

ஸ்திரீகளுக்கு உயரிய ஓர் திவ்ய ஔஷதம்.

ஸ்திரீகளுக்கு கர்ப்ப ஆசயத்தில் உண்டாகும் கெட்ட தஸ்ரா ஆகிய கிருமியதில் ருதுகள் நின்றுபோதல், காலக்கிரமம் தவறி ஆதல், முறையாக காணுதல், அதிகம், காணுதல், ருதுக வயற்றுவலி, பெரும்பாடு ஆகிய சகல கர்ப்பக் குற்றங்களையும் 'அசோகி' என்னும் திவ்ய ஔஷதம் பூரணமாகக் குணப்படுத்தி தேக ஆரோக்கியத்தையும் சந்தான விருத்தியையும் தருவதில் நிகரற்றது. கர்ப்பகாலத்தில் உபயோகிப்பதால் சுகப்பிரசவம் உண்டாகிறது. புட்டி ஒன்றுக்கு விலை ரூ. 2. தபால் செலவு வேறு.

டைரக்டர், பாரத டிஸ்பென்ஸரி,
பக்கே கவுண்டன் வீதி, கோயமுத்தூர்.

## பொருள் செய்வகை.

உங்கள் வியாபாரம் விருத்தியாக வேண்டுமானால்இப்புத்தகத்தை நீங்கள் அவசியம்வாசிக்கவேண்டும். இப்புத்தகத்தில் எந்தப் பக்கத்தைப் பார்த்தாலும் உங்களுக்குத் தெரியாத அநேக இரகசியங்கள் இருக்கின்றன. ஐந்துவருஷத்திற் கொருதடவை சில சாமான்கள் விலைபெறுகின்றன. இது உங்களுக்குத் தெரியுமா. இப்புத்தகத்தை வாசித்துப் பாருங்கள். கிராம வியாபாரம், துணிந்து செய்யும் வியாபாரம், ஒப்பந்த வியாபாரம், சரக்குகள் விலை ஏறுவதும் இறங்குவதும் அறியும் விபரம் இன்னும் அநேக இரகசியங்கள் இப்புத்தகத்தில் அடங்கியிருக்கின்றன. இதன் விலை ரூபாய் ஒன்று.

தேவி ஆஸ்ரமம்.
திரௌபதை அம்மன் கோவில் வீதி, புதுச்சேரி.

## கணித சோதிடம்

பரிசுத்த கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி தாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னுமொன்று எவரு சுபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான நூல்கள் சோதிட நூற்கள் பலவுள்ளதால் தாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாக இராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக கலையாவது கஷ்டம் எழுதும்போது நன்றாக தெரிவியுங்கள்.

கே. ஆறுமுகம் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

# தண்டபாணி வைத்தியசாலை.

## (பழைய வள்ளி வைத்தியசாலையே)

## (ரூபாய் 2). அமிர்தம். (Rs. 2).

**Amirtham. A Sure Remedy for Piles, Constipation & All Stomach Troubles.**

பிறவிப் பிணியைப் போக்கும் தேவாமிர்தம் போன்றது. உடற் பிணியை ஓட்டும் உறுதியையுடையது.
குடல் வியாதிகளை யெல்லாம் குலைக்கும் குணமுள்ளது. மூல வியாதிகளை யெல்லாம் முறிக்கும் முருகனை யொத்தது.

பழைய சித்த ஆயுர்வேத யூனனி முறைகளையும், புதிய ஆங்கில முறையையும் தழுவி பரம்பரை அநுபோகத்தைக் கொண்டு சிறந்த மூலிகைகளினாலும், உயர்ந்த சத்துக்களினாலும், (போதை, விஷம், ரச சம்பந்தம் சிறிதுமில்லாத முறையில்) தயாரிக்கப்பட்ட இந்த அமிர்தமாகிய லேகியத்தை பத்தியமில்லாமல் தினம் இரு வேளை சாப்பிட்டுவர பித்தம், மயக்கம், பசியின்மை, சோகை, காமாலை, பாண்டு, வயிற்று வலி, குன்மம், அரோசிகம், வெட்டை, பித்த வாய்வு, மார்வலி, மண்டை இடி, ஒற்றைத் தலைவலி, மேகம், வாதம், கீல்வாய்வு, ஓடுவாய்வு, கீல்பிடிப்பு, கீல்வீக்கம், முழங்கால் வாய்வு, சுவாசகாசம், பாரிச வாய்வு, மலபந்தம், மலச்சிக்கல், மூலாதார உஷ்ணம், மூலமுளை, மூலத்தில் ரத்தம் விழுதல் முதலிய இன்னும் நாட்பட்ட அநேக வியாதிகளும் போகும். ஆணும் பெண்ணும் சிறியோர் முதல் பெரியோர் வரையில் சாப்பிட்டு குணமடையலாம்.

குறிப்பு.—அதிகமாய் உழைக்கும் ஆபீசர்களும், குமஸ்தாக்களும், மாணவர்களும், இந்த லேகியத்தை உபயோகிப்பார்களாகில் அன்றாடம் மல விசர்த்தியைக் கிரமமாகப் பெற்று, சிரமம் தோன்றாமல் சுகமடைந்து தங்கமயமான திடகாத்திர தேகத்தை யடைவர்.

24 நாள் உபயோகிக்கக் கூடிய அமிர்தம் 1 சேர் டின் ரூ. 2. தபால் சார்ச்சு வேறு.

## (ரூ. 1—8—0) அமிர்தரஸம். (Rs. 1-8-0)

இந்த ரசம் ஏனைய ரசங்களுக்கு அரசராயும், தேவர்களுக்கு அமிர்தமாயும், தமிழர்களுக்கினிய அதிரசமாயும், சமயத்திலுதவும் சஞ்சீவியாயும், ஆபத்தையகற்றும் அமிர்தரசமாயும் எல்லாராலும் போற்றிப் புகழப்படுகிறது. உள்ளுக்குச் சாப்பிடவும், மேலுக்குப் பூசவும் ஒரே மருந்தாயுள்ளதும் அமிர்தரசம்தான். சகல வியாதிகளையும் வலிகளையும், அமிர்தரசம் ஒன்றே அதம் செய்யக்கூடியது. துளிக் கணக்கில் உபயோகித்து மணிக் கணக்கில் சுகம் பெறலாம். தலைவலி முதல் கை கால் குடைச்சல்வரையுள்ள எல்லா மேல்வலிகளும், ஜலதோஷம், சுரம், அஜீர்ணம், வயிற்றுப் போக்கு முதலிய உள் வியாதிகளும் இந்த அமிர்தரசம் ஒன்றினாலேயே ஒழிந்துவிடும். இதன் பெருமையை ஒருதரம் உபயோகித்தவர்கள் உள்ளளவும் மறக்கமாட்டார்கள். புட்டி 1-க்கு விலை ரூ. 1—8—0.

முக்கிய குறிப்பு:—வேலூர் வள்ளி வைத்தியசாலையை இதுவரை 20 வருட காலமாய் நடத்திவந்து அநேக மெடல்களும் நற்சாக்ஷிகளும் பெற்றவரான பிரபல டாக்டர் எஸ். பி. அவர்கள் பலரின் வேண்டுகோளுக்கிணங்கி தமது சிற்றூராகிய வேலூரை விட்டு சென்னை நகருக்கு வந்து வள்ளி வைத்தியசாலையின் பெயரை தண்டபாணி வைத்தியசாலையென மாற்றி பல பிரபுக்களையும், தனவந்தர்களையும், சித்த ஆயுர்வேத யூனனி ஆங்கில டாக்டர்களையும் துணைவராகக் கொண்டு ஏராளமான பொருட்செலவில் நல்ல முறையில் உயர்ந்த மருந்துகளை திறம்படச்செய்துபயம்படவிற்க முன்வந்திருக்கிறார். நண்பர்களனைவரும் முன்மாதிரியே இன்னும் பல்லோர்களாகச் சேர்ந்து தங்களுக்குற்ற நோய்களை தண்டபாணி வைத்தியசாலையாரிடம் தெரிவித்து மருந்துகளைப் பெற்றுண்டு குணமடைந்து சுகமாய் வாழ்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

இங்ஙனம்: மானேஜர், தண்டபாணி வைத்தியசாலை.

நற்சாக்ஷி:—சென்ற இரண்டு வருஷ காலமாக நான் வள்ளிவைத்தியசாலைக்குச் சென்னை ஏஜண்டாக இருந்துவந்ததினால் ஷை வைத்தியசாலையின் மருந்துகள் நோய்வாய்ப்பட்ட மக்களுக்குக் குறைந்த செலவில் நிறைந்த பலனைக் கொடுத்துவருவதைக் காண நேர்ந்தது. தவிர நோய் தீர்ந்தவர்களும், நோயாளிகளும் ஷை வைத்தியசாலையின் மருந்துகளை வெகுவாய்ப் புகழ்ந்து கொண்டாடிப் பேசியதையும் நேரில் கேட்டிருக்கின்றேன். அப்படிப்பட்ட வள்ளி வைத்தியசாலையை அநுபோகசாலியான டாக்டர் எஸ். பி. அவர்கள் சென்னைக்கு மாற்றி அதற்கு தண்டபாணி வைத்தியசாலையென பெயரிட்டு பல பிரபலஸ்தர்களின் கூட்டுறவைக்கொண்டு நடத்த முன்வந்ததற்காக தமிழுலகம் அவருக்கு மிகவும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறது. அவருடைய வைத்தியசாலையின் மருந்துகளை வாங்கி உபயோகிப்பவர்களுக்கு அதில் கூறப்பட்டுள்ளபடி குணமில்லையானால் அவரவர்கள் கொடுத்த பணத்தை வாபீசு செய்யவேண்டி என்னிடம் ரூபாய் 1000 ஆயிரம் (ரூபாய்) ரொக்க ஜாமீனாக ஷை தண்டபாணி வைத்தியசாலையாரால் கட்டப்பட்டிருக்கிறது. நானும் இம்மாதிரி யோக்கியமும் திறமையும் வாய்ந்த புகழ்பெற்ற அநுபோக வைத்தியசாலைக்கு சோல் ஏஜண்டாக இருக்க ஒருப்பட்டு ஏஜன்சியையும் ஒப்புக்கொண்டிருக்கிறேன். உத்திரவாதம் செய்யப்பட்ட மேற்படி வைத்தியசாலையிலேயே நண்பர்கள் தங்கள் வியாதிகளுக்கு தக்க மருந்துகளைப் பெற்று சுகமடையும்படி சிபார்சு செய்கின்றேன். குணமில்லாவிடில் அவரவர்கள் பணத்தை வாபீசு செய்ய ரூ. 1000த்தை நான் எப்பொழுதும் தயாராய் கையில் வைத்துக்கொண்டிருக்கிறேன் என்பதை அன்பர்கள் உணர்ந்து எச்சரிக்கையாக நல்ல வைத்தியசாலையை நாடிப் போகும்படி கேட்டுக்கொள்கிறேன்.

என். தண்டபாணி பிள்ளை.

விசேஷ குறிப்பு:—எல்லா வியாதிகளுக்கும் கைகண்ட சகல மருந்துகளின் விபரமடங்கிய கேட்லாக் இனமாக அனுப்பப்படும். (பர்மா, சிலோன் தவிர) கப்பல் மூலமாகப் போகும் நாடுகளுக்கு ரூ. 3 அட்வான்சாக முன்பணம் அனுப்பினால்தான் பாக்கிக்கு வி. பி. மூலம் மருந்துகள் அனுப்பப்படும். வி. பி. இல்லாத நாட்டார் தபால்செலவு ரூ. 2—0—0ம் மருந்து கிரயம் பூராவும் சேர்த்து முன்பணமாக அனுப்புதல் வேண்டும்.

நேரில் வந்தும் டாக்டர்களிடம் நோயை அறிவித்து மருந்துகளைப் பெற்றுப் போகலாம்.

சோல் ஏஜண்டு:- என். தண்டபாணி பிள்ளை,
6/90, பவழக்காரத் தெரு, மதராஸ்.

எல்லா ஊர்களுக்கும் சப் ஏஜண்டுகள் தேவை. நல்ல பலன் உண்டு. தபால் பெட்டி 292, மதராஸ் என்ற விலாசத்திற்கு எழுதவும்.

டாக்டர் எஸ். பி.
தண்டபாணி வைத்யசாலை,
292, சைனுபஜார், மதராஸ்.

## பார்ப்பனீயம் ஒழிந்த திதி.

நாகப்பட்டணம் தாலுக்கா, வேளூர் கிராமத்தில் எனது தந்தையாரின் திவசத்தை நிகழும் விபவ-ஞு ஆவணி-மீ 6-உ யன்று பார்ப்பனீயத்தை முற்றிலும் ஒழித்து சுயமரியாதை திதியாக பந்துக்களையும் நண்பர்களையும் கொண்டு வெகு விமரிசையாக நடத்தி ஏழைமக்களுக்கும் அன்னம் அளித்து பார்ப்பனரின் காலில் விழாமல் சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொண்டேன். இதிலிருந்தஎன் குடும்பத்தில்நடக்கும் எச்சடங்குகளிலும் புரோகிதம் அறவே ஒழித்து நடத்தவேண்டுமென்று தீர்மானித்துவிட்டேன்.

R. சௌரிராஜா நாயுடு.

## புரோகித பகிஷ்காரம்.

பார்ப்பனரல்லாதார் மகாநாடுகளில் செய்த தீர்மானங்களுக் கிணங்க, நான் இன்று என் அன்னையின் 12-ஆம் ஆண்டு திதியை பார்ப்பனப் புரோகிதத்தை ஒழித்துச் செய்தேன், பார்ப்பனரல்லாதபுரோகிதரையுஞ்சேர்க்கவில்லை. சடங்குகள் ஒன்றுமின்றி அன்னையின் ஞாபகார்த்தமாக தகுந்த ஏழைகளுக்குத் திருப்தியாக அன்னமிட்டேன்.


C. S. தெய்வசிகாமணி.

## பார்ப்பனீயம் ஒழிந்த திதி

கொழும்பு நகரில் சிறந்த வர்த்தகரும் சைவச்சீலருமான குலசேகரன் பட்டினம் திருவாளர் ரு, ம, ப, செந்திலாறுமுகம் பிள்ளையவர்கள் தமதருமைத்தாயாரின் ஆண்டு விழாவானதிதிச்சடங்கை 20-6-28 புதன் கிழமை யன்று பார்ப்பனரையொழித்து ஆண்டவனை வழிபட்டு நாலாங்குருக்குத் தெருவிலிருக்கிற தமது இல்லத்தில் சுற்றத்தார்களுக்கும் நண்பர்களுக்கும் விருந்திட்டு சிறப்பாக நடத்தினர்கள்.

மு. சண்முகம்,
திருச்செந்தூர்.

15 இனம் சாமானுடன் கொடுக்கப்படும்



எங்களின் தாரா லீவர் 18 காரட்டு ரோல்ட்டு கோல்டு பாக்கெட் கடியாரம் ஆர்டர் செய்பவர்களுக்கு இதில் கண்ட 15 இனம் சாமான் கொடுக்கப்படும். இனம்களுடன் ரூ 4—8—0.

தீ. பான்ஸி வாட்சு அவுஸ்,
ஜி. டி. மதராஸ்.

மதுரை, இராமனாதபுரம் ஜில்லா பார்ப்பனரல்லாத இளைஞர் மகா நாடுகளிலும் இன்னும் அநேக பொருட்காட்சி சாலைகளிலும்,

அநேக டாக்டர்களிடமிருந்தும் நற்சாட்சி பத்திரம் தங்க மெடல்கள் பரிசுபெற்ற

மதுரை. V. K. அன் சன்ஸ்., கம்பெனியாரின்

### ஸன் பிளவர் சோப்,

### ஸர்தார் சோப்,

ஹார்ட்லி அன்பார்மஸ், டின் பிஸ்கட்ஸ் உபயோகப்படுத்துங்கள்.

எல்லா ஷாப்புகளிலும் சகாயமான விலைக்குக் கிடைக்கும்.

தந்தி விலாசம்,
"பிஸ்கட்" மதுரை.

V. K. அன் ஸன்ஸ்.,
கீழமாசி வீதி, மதுரை.

# குடும்பத்துக்கோர் பொக்கிஷம்.

சில மாதங்களுக்குள்

## "இல்வாழ்க்கையின் இரகசியங்கள்"

11,000 பிரதிகள் விற்பனையாகி யிருக்கின்றன. ஒருவர் வாங்கிப் படித்தால் அவர் தம் நண்பர்கள் எல்லோரையும் வாங்கும்படி தூண்டுகிறார். எனவே இப்புத்தகத்திற்கு உள்ள மதிப்பை நாங்கள் சொல்லாமலே தெரிந்துகொள்ளலாம்.

இல்வாழ்வை நல்வாழ்வாக
நடத்த உத்தேசிக்கும் ஸ்திரீ புருஷர்கள் கையில்
இந்நூலின் பிரதியொன்று இருந்தே தீரவேண்டும்.

# இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

## மூன்றும் பதிப்பு விலை ரூ. 2.

ஒவ்வொரு ஊரிலுமுள்ள புஸ்தக வியாபாரியிடமும் கிடைக்கும். போலி புஸ்தகங்களை வாங்கி ஏமாறாதீர்கள். புஸ்தகத்தின் பேரில் "வாஸன் புஸ்தகசாலை" என்ற பெயர் இருக்கின்றதாவென்று பார்த்து வாங்குங்கள் எமது விலாசம்:—

## வாஸன் புஸ்தகசாலை,

244 தங்கசாலை வீதி, தபாற் பெட்டி 119, மதரூஸ்.



3-ம் பக்கத் தொடர்ச்சி.

சமய குரவர்களைக் குற்றம் சொல்லவும், தன்னைப்போன்றே அன்னியரிடமும் பக்தி காணும் பக்திமான்களின் மனதை வருத்தப் படுத்தவும் 'குடி அரசு' தோன்றினதன்று. நாம் காணும் பல பக்திமானும், பண்டிதனும், சாஸ்திரியும் சனபாடிகளும் காலையில் ஒரு சொம்பு காப்பி இல்லாவிட்டால் கடவுள் வந்து தடுத்தாட் கொள்ளமாட்டார் என்பது அவர்களுக்கு அனுபோக மாகத் தெரியும். அமெரிக்கா தேசத்து எடிசன் எலெக்ட்ரிக் விளக்கும், பெல்ஜியத்து நீலக்கண்ணாடியும், பெங்களூர் ஆப்பிளும், சித்தூர் சாத்துக்குடியும், ஈரான் பாதாமியும், காபூல் திராட்சையும் நம் தெய்வங்களின் பள்ளியறைக்கு வேண்டியிருக்கையில் நமது பிள்ளைகளின் மண்டையில் குப்பை கூளங்களை ஏற்றாமல் இயற்கை சாஸ்திரத்தைப்படித்து அறிவிலேயே அவர்களை விர்த்திசெய்து புத்தியின் சக்திக்கு பெலவீனத்தை உண்டுபண்டும் மதப்புரட்டான கதைகளை அவர்கள் முன்னால் இறக்க பண்டிதர்கள் பாடுபடுவதை விட்டு, சைவ சமயத்திற்காக அநேக பணங்களை நம் பெரியவர்கள் நிதி மடாதிபதிகளிடம் ஒப்படைத்திருக்கிறார்களே. அப்பணங்கள் அந்த மதத்திற்கோ அதைச் சேர்ந்தவர்க்கோ உபயோகப் படாமலிருக்கிறதே. அதற்காக அவர்களிடம் சண்டையும் போட்டு அந்தப் பணங்களை சைவ சமயப்பிள்ளைகளின் விர்த்திக்கு உபயோகப் படும்படியாகச் செய்யுங்கள். உண்மை சிவ பக்தியுடையவர்களும் உண்மையாகவே சமயத்தை நிலை நிறுத்தவேண்டுமென்ற யெண்ணமுடையவர்களும் உண்மையாகவே ஜீவகாருண்ணியமுடையவர்களும் உண்மையாகவே சமய ஆசாரமுடையவர்களும் யாராயிருந்தாலும் சைவ மடங்களில் பாழாகும் பணங்களை ஜன சமூகவிருத்திக்குச் செலவுசெய்ய எல்லாரும் சேர்ந்து பிரயத்தினப்படுங்கள்.

## காவேரிப்பட்டணம் பழைய மாணவர் சங்கம் ஆண்டு விழா

செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்குப் போர்டு செகண்டரி பாடசாலையின் தலைமை உபாத்தியாயர் மகா-ரா-ஸ்ரீ எஸ். எம். லக்ஷ்மண செட்டியார் பி. ஏ. அவர்கள் தலைமையின் கீழ் ஷை பாடசாலையின் ஆலில் ஷை முதல் ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. சுமார் 250 க்கு மேற்பட்ட ஜனங்கள் விஜயம் செய்திருந்தனர். ஆங்கிலத்திலும், தமிழிலும், சிறந்த கருத்துக்களும், கவித்திறனும் அமையப்பெற்ற பல சிறந்த கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. இறுதியாக யாவருக்கும் தாம்பூலம், பழம், சர்க்கரை வழங்கப்பட்டு வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.


## அறிக்கை.

எங்களிடம் பிரான்ஸி நல்ல ரகமுள்ள வெள்ளி ஜரிகை மார்க்குகளும், பாம்பே முவாலட்டி மேல் கண்ட மார்க்குகளும், சூரத் மார்க்குகளும் கைவசமிருக்கிறது. உள்ளூர் ஜவுளி தினுசுகளும் இருக்கிறது. விலைஜாப்தா வேண்டியவர் எழுதினால் அனுப்பித்தருகிறோம்.

சி. லிங்கி செட்டி,


எஸ். வெங்கிட்டராம செட்டி,

ஜவுளி அண்டு ஜரிகை வியாபாரம்,

கோயமுத்தூர்.

கவனியுங்கள்! நல்ல லாபம்!

**PHOTO HAND CAMERA**



ரொம்பவும் குறைந்த விலை ரூபா. 2—15—0

நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. எக்காலத்திலும் தெளிவான போட்டோபிடிக்கலாம். இந்த காமிராவை வாங்கி நூறுநூறாகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டனர். போட்டோவின் அளவு $3\frac{1}{2}$X$2\frac{1}{2}$ இருக்கும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும். சிறிது நாளைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூ. 2—15—0 குக் கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

கானடியன் வாட்ச் லீகின், ஜி. டி. மதராஸ்

## சுவாச காச ரோகத்திற்கு

ஆஸ்த்மா சிகிச்சைக்கு அரசனுகிய சுபரோக நிவாரணி என்னும்

# ஆஸ்த்மா பௌடர்.

கொடிய சுவாசகாச ரோகத்திலிருந்து தப்பித்துக்கொள்ள விரும்புவோர் இதை ஒரு முறை உபயோகித்துப் பாருங்கள். கபத்துக்கு இது ஒரு சத்ரு. நிமிஷக் கணக்கில் தொந்திரவை நீக்குகிறது.

வைத்திய சிரோன்மணிகளால் அங்கீகரிக்கப்பட்டது. சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு, இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, காங்கைப்பு, எரிச்சல், புண், வலி முதலிய சகல கஷ்டங்களையும் இந்த ஆஸ்த்மா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்து கெட்டியான கபத்தை இளகச் செய்து கபத்தை வெளியில் தள்ளி கஷ்டமில்லாமல் எப்பொழுதும்போல் சுலபமாய் மூச்சுவிடும்படியாயும், பசிதீபனமுண்டாக்கி ஆவலுடன் அதிக ஆகாரம் உட்கொள்ளும்படியாயும், இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரைசெய்யும்படியாயும் செய்கிறது. தவிர, இம்மருந்து சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், நாசியில் நீர்வடிதல், விஷ ஜுரம், தேகம் மெலிதல், முகம் வெளுத்தல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளுக்கு மிகவும் மேலான மருந்தாயும், நிமிஷக்கணக்கில் அதிக ஆச்சர்யத்துடன் நிவர்த்திசெய்யத் தக்கதாயுமிருக்கிறது.

48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக் கூடிய டப்பா 1-க்கு விலை ரூ. 1-4-0. தபால் செலவு வேறு. புரோப்ரைட்டர், பூ. மா. சோக்கலிங்க முதலியார்,

திருநாவுக்கரசு வைத்தியசாலை,

அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். (S. I.)

## திருப்பூர் ஸ்பெஷல் கார்டிகன் பனியன்ஸ்.

தமிழ் நாட்டு இளைஞர்களால் தயார் செய்யப்பட்டிருக்கிறது.

20 இஞ்சு முதல் 40 இஞ்சு வரை உள்ள எல்லா தினுசுகளும் கிடைக்கும்.

விலை 32 இஞ்சு 2 நூல் புரா சைஸ் டஜன் 1 க்கு 3—8—0,

,, ஷை 3 நூல் Thick Fancy 5—0—0.

இவைகளைத் தவிர எங்களிடம் பெரிய வலை, சின்ன வலை, கோகர்ஜான் வலை, திகபிக், திண்பிக், ராயல் திக், ராயல் ரிப், பிளேன் முதலான பனியன்களும் இந்தியாவிலுள்ள எல்லா பனியன்களையும் விட விலை சலீசாகவே கிடைக்கும்.

வேண்டியவர்கள் நேரே எங்கட்கு ஆர்டர் செய்யவும். விலை விபர ஜாபிதா இனாம்,

The General Knitting Factory,
Tirupur, (S, India.)



பழனியில் இதுவே பாரம்பரையான வைத்தியசாலை!

உலகப் பிரசித்திபெற்ற வைத்திய ஆசிரியர்!

சன்மானங்கள் பெற்ற சமஸ்தான வைத்திய நிபுணர்!

அநேக பரிசுகளும், மெடல்களும், நற்சாக்ஷிகளும் பெற்று உலகப் பிரசித்தி அடைந்திருப்பதோடு 25-8-23ல் சென்னையிலும், 14-7-27ல் மதுரையிலும் நடந்த வைத்திய கான்பரன்ஸ் அண்டு மருந்து கண்காக்ஷியில் இவர் மருந்துகள் பஸ்ட்கிளாஸ் (முதல்தர) தேவ ஔஷதங்களென தங்க மெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்.

தேகபலம், மனோசக்தி, தாதுபுஷ்டி, ஜீரணசக்தி, உற்சாகம், ஞாபகசக்தி, சுறுசுறுப்பு, ஊக்கம், என்றுமழியாத இளமைப் பருவத்தை அடைய வேண்டுமானல்

# பழனி சி. எம். சாமி முதல் நெ. மகாவீரிய அசல்

# தங்க பஸ்பம் சாப்பிடுங்கள்.

பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

தாதுபுஷ்டிக்கு இதற்கு நிகரானது புவியிலெங்குமில்லை. தாதை கட்டுவதிலும் பசியை உண்டாக்குவதிலும் இரத்த விருத்தியைக் கொடுத்து தாதுபுஷ்டியைத் தருவதிலும் அபார சக்தி வாய்ந்தது. இது பிரபுக்களுக்கான இதை ரோய் பலம்போல் ஒன்றரை மண்டலம் காலை மாலையாக சாப்பிட சகல வியாதிகளையும் நீக்கி வெகு சீக்கிரத்தில் வீரியத்தையும் பலத்தையும் கொடுத்து இழந்த பலமும் ஆண்மையும் திரும்ப உண்டாக்கும். இவ்வாழ்க்கையின் இன்பத்தைக் கொடுத்து பால்யம், யௌவனம், விருத்தாப்பியம் இந்தப் பருவங்களில் அடையவேண்டிய காலத்திற்கு முன் அடைந்த விபரீதங்களை நிவர்த்தி செய்யும். இழந்த னத்தை நீக்கி வலலமை அடையச் செய்வதில் பேர்பெற்றது. இதன் பெருமையை எழுதி முடியாது. ஒருமுறை உபயோகித்தவர்களுக்கே இதன் பெருமை தெரியும். அவ்வளவு அபார சக்தி இதனிடமிருக்கிறது. வெள்ளை, வெட்டை, கடுப்பு, பவுத்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம் குஷ்டம், கருமேகம், சூலை முதலிய சகல கர்ம வியாதிகளும் நீங்கும். பத்தியமில்லை. 100 நாள் பஸ்பம் ரூ. 40. 48 நாள் பஸ்பம் ரூ. 20. 24 நாள் பஸ்பம் ரூ. 10. வி. பி. சார்ஜ் வேறு.

நற்சாக்ஷி:—தங்கள் தங்க பஸ்பம் சாப்பிட்டதில் எனக்கிருந்த வாய்வு, வெட்டை, பலக்குறைவு முதலியன நீங்கி அபார தாதுபுஷ்டி உண்டாயிருக்கிறது. இதன் பெருமையை எழுதமுடியாது. இன்னும் ஷை தங்க பஸ்பம் ஒரு மண்டலத்திற்கு அனுப்பவும். வி. பி. வரதராஜப்பெருமாள் சாமி, கவிராயர், பொள்ளாச்சி.

ஏராளமான நற்சாக்ஷிகளை கேட்லாக்கில் பார்க்கலாம். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

பினங் முதலிய அன்னிய தேசவாசிகள் ரூபாய் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

## சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்

## C. மலையப்பசாமி

நித்தியானந்த வைத்தியசாலை,
பழனி S. I.

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:-முருகன் வஜன்வி, 43 அரமனைக்காரத் தெரு, ஜி. டி. சென்னை.

---

13-ம் வருடம் பிறந்துவிட்டது! 13-ம் வருடம் பிறந்துவிட்டது!

# "ஆனந்தபோதினி"

ஓர் உயர்தர தமிழ் மாதப் பத்திரிகை.

48 பக்கங்களில் உயர்ந்த வியாசங்களுடன் வெளிவருவது.

தமிழ் நாட்டில் உள்ள மாத சஞ்சிகைகளில் முதன்மை பெற்றது.

13 வருடங்களாக நடைபெற்று வருவது.

20,000 சந்தாதாரர்களையுடையது. எல்லோரும் படிக்கத் தக்கது.

இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய உள்நாடுகளுக்கு வருட சந்தா ரூ 1.

பினங், சிங்கப்பூர், செட்டால் முதலிய வெளிநாடுகளுக்கு வருட சந்தா ரூ. 1-4.

மாதிரி காப்பி இனம். விலாசம்:— 'ஆனந்தபோதினி' ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்

---

கடவுளை வணங்க

பார்ப்பனத்தரகர் வேண்டுமோ!

---

## டேபில் டைம்பீஸ் இனம் !!!

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின் மேல் வைக்கக்கூடியதொரு அழகான டேபில் டைம்பீஸ் இனமாக சேர்த்து அனுப்பப்படும்.



இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். மூன்றுங்கள் விலை ரூ. 7-8-0 தபால் கூலி பிரத்தியேகம்.

வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் இதற்கு 8-8-0 முன் பணம் அனுப்பவேண்டும்.

தி பான்வில் வாட்சு ஆபீஸ்,
15 A-பீட். ஜி. டி மதராஸ்

---

இனம்! இனம்!

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனம்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம்விசித்திரவேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலேசொல்லியபடி பௌண்டன்பேனா இனமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

---

முன் விலை ரூ. 14. இப்பொழுது ரூ 7.

22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்தவேஷப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனமாய்ச்சேர்த்து அனுப்பப்படும்.5வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

---

மலையாளம் மதனகாமேஸ்வரி லேகியம்.

பேர் பெற்ற தாதுபுஷ்டி மருந்து இதுவே. ராத்தல் 1-க்கு ரூ. 8. தபால் செலவு 8 அணா. காலண்டரும் கேடலாக் இனம்.

சித்த ஔஷதசாலை கம்பெனி K. A.
போஸ்டு மூல்லச்சேரி, தென் மலையாளம்

---

சுயமரியாதை அடைய
பார்ப்பனீயம் ஒழிய,
'திராவிடன்' 'குடி அரசு'
பத்திரிகைகளை வாசியுங்கள்.

பார்த்தீர்களா! இரகசிய நூல் படித்தீர்களா!!

ஹிப்னாடிஸ மெஸ்மரிஸ மென்னும்

# மனோவசிய ரகசிய சாஸ்திரம்.

இப்புத்தகம் ஆங்கில டாக்டர் செய்து அனுபவ மடைந்தது. இதில் தூங்காமல் தூங்குதல், தூக்கத்திலிருப்பவனைப் பலவித வேலை செய்வித்தல், பிறரை வசியப்படுத்தல், புலி முதலிய மிருகங்களைத் தன் வசப்படுத்தல், தூர சங்கதி அறிதல், மருந்தில்லாமல் நோய் தீர்த்தல் முதலிய பல ரகசிய மெஸ்மரிஸ சாஸ்திரம் சித்திரப் படங்களுடன் அடங்கியிருக்கிறது. விலை ரூ. 1—8—0. ஸ்ரீ பானுமதி புஸ்தகசாலை, சூளை போஸ்டு, மதராஸ்,

வியாபாரிகளே! கவனியுங்கள்!!

வியாபாரத்தின் நிலைமையை அடிக்கடி அறிந்து லாபகரமான வழியைத்தெரிந்து அவ்வழியில் தொழிலை நடத்துவதினாலேயே வியாபாரம் ஓங்கி வளரும்

## லாபகரமான வழியை அறிவதெப்படி?

உங்கள் தொழிலுக்குத் தகுந்தாப்போல் சரியான கணக்குகள் வையுங்கள்

உங்களுடைய கணக்கு முறைகளை ஒழுங்காக வைத்துக்கொள்வதற்காக

## வர்த்தகக் கணித நூல்

என்ற புதிதாக வெளிவந்த புத்தகத்தை வாசித்துப் பாருங்கள்

ஒரு தரம் பார்த்தவுடனேயே நமக்கு வரவேண்டிய தெவ்வளவு, நாம் கொடுக்க வேண்டிய தெவ்வளவு, லாப நஷ்டமெவ்வளவு, முதல் தொகை எவ்வளவு வியாபாரத்தில் போடப்பட்டிருக்கிறது, எவ்விதமான தொழில் லாபத்தைக்கொடுக்கிறது என்று சுலபமாகப் பிறருடைய உதவியில்லாமலே ஆங்கிலேயர் எப்படித் தெரிந்து கொள்ளுகிறார்களோ அதே முறையில்தான் டி புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது. மேலும், எல்லா வியாபாரிகளும் எவ்விதமான தொழிலுக்கும் டி புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற முறைப்படி கணக்குகள் வைத்துக்கொள்ளலாம். படிப்பதற்குக் கஷ்டமில்லாதபடி தெளிவான நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூ 2

**வாசன் புஸ்தகசாலை.** நெ. 244, தங்கசாலை வீதி, தபாற் பெட்டி நெ. 119, சென்னை

ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

## மன்மத ஸ்தம்பன குளிகை

குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனாமாகக் கொடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம், ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முக தேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால்பெட்டி 119, ஜி. டி, மதராஸ்.

## ஞான திருஷ்டி.

இப்புத்தகத்தில் இறந்தவர்களுடன் பேசுதல், காணமல் போனதைக் கண்டெடுத்தல், இருந்தவிடத்திருந்தே தூர தேசங்களைப் பார்த்தல், மனிதர்களின் திரிகால வர்த்தமானங்களை அறிதல் முதலியன எழுதப்பட்டுள்ளன. "ஞான திருஷ்டிக் கண்ணாடி" என்னும் உபயோகிக்கும் கருவியுடன் விலை ரூ. 1—8—0. தபால் கூலி பிரத்தியேகம். பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும். ஆரியன் மைகிக் இன்ஸ்டிட்யூட், சௌகார்பேட்டை, மதராஸ்.

## பெண்கள்

ஆவலாய்விரும்பக் கூடியது! உயர்ந்த மல்லில் பச்சை, புளூ, வயலெட், ஆரஞ்சி, கருப்பு, கெம்பு கலர்கள். கெட்டிச்சாயம், கரையிலும் முந்தியிலும் பூவேலைமானமுள்ள நூதனமாகத்தயார் செய்த புடவை. 18 மு. X 48 இஞ்சு புடவை ரூ. 4—8—0. டி பூவேலைமானமில்லாதது ரூ. 4—4—0. டி உடல் சிகப்பு அல்லது கருப்பு பல மாதிரி புள்ளிகள் போட்ட சன்னடி புடவை ரூ. 4—8—0. புதிய கேடலாக் இனாம்!

The Madura Oriental Trading Co.
Laxmi Colth Store, MADURA.

## ஆநந்த குணபோதினி.

மூன்றாம் வருடம்.

இது போன்ற நவீன மாதாந்தர சஞ்சிகை இது வரை வெளிவரவில்லை இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கிலமாத சஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் கற்பு, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிக்கை இது ஒன்றேதான். 5000-சந்தாதாரர்களுள்ளது. வருட சந்தா ரூ. 1, வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரி இனாம். இது பெரிய ஆஸ்தி. உடனே எழுதுங்கள்.

'ஆநந்த குண போதினி' ஆபீஸ் 302, தங்கசாலை வீதி, மதராஸ்.

## சட்ரஸ லேகியம். (சட்னி)

இவை அநேக விதமான மூலிகைகளினாலும், காயல் திராக்ஷ ரசத்தினாலும் தயாரிக்கப்பட்டது குணம்:—மலபந்தம், அஜீர்ணம், வாய்வு நோய், வயிற்று வலி முதலிய வியாதிகள் நிவர்த்தியாகும். சாப்பிடும் முறை:— சுடுகிற சாதத்தில் அரை தோலம் இந்த லேகியத்தை நெய் போட்டுக் கொண்டு சாப்பிடவும்.

டின் ஒன்றுக்கு கிரயம் ரூ. 0—8—0.

## ரத்தன் மிஸரி அல்வா.

நீரான இந்திரியத்தை கெட்டி செய்யும். தாது விருத்தியாகும். ஸ்திரீ சம்போகம் சுகங்கொடுக்கும். சொப்பன ஸ்கலிதம், மூத்திரத்தில் பொட்டு பொட்டாய் வீரியம் போகிறது, ஸ்திரியைக் கண்டவுடன் வீரியம் ஸ்கலிதமாய் சம்போகத்தின்பேரில் பிரியம் இல்லாமல் போகிறது, துர் அப்பியாசத்தினால் புருஷத்துவம் இல்லாமல் இருக்கிறது ஆகிய அநேக விதமான மேக வியாதிகள் முதலானவைகளைப் போக்கடித்துவிடும்.

கிரயம் டின் ஒன்றுக்கு ரூ. 2—8—0,

மேல்கண்ட மருந்துகள் ஈரோடு, கோயமுத்தூர், பொள்ளாச்சி, திருப்பூர், கிருஷ்ணகிரி, திருப்பூர், தருமபுரி இந்த இடங்களில் கிடைக்கும்,

ஆஞ்சநேய ஜோதிஷாலயம், கோர்த்து பேட்டை, பெங்களூர் சிட்டி.


**சுயமரியாதை பெற்றால் சுயராஜ்யம் பெறலாம்.**

ஸ்ரீ [illegible] அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.